விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 268 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 27 புதன்கிழமை (13.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## 7 எச்சங்கள் அடையாளம்

6ஆம் நாள் அகழ்வு



15

## சிறுமியின் கை அகற்றல்

## தாதியின் தன்னிலை விளக்கம்

03ஆம் பக்கம் பார்க்க

## நல்லைக் கந்தனின் இரதோற்சவம் இன்று



15

## மின்சார வாகன இறக்குமதிக்கு அனுமதி

(கொழும்பு)

இலங்கையில் மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு, நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சர 15

## அத்தியாவசியமானது தொடருந்து சேவை

### ஜனாதிபதியால் வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

இலங்கையின் தொடருந்து ஊழியர்கள் இன்று முதல் பணி விலகல் போராட்டத்தை அறிவித்துள்ள நிலையில், தொடருந்து சேவையை அத்தியாவசிய சேவையாக மாற்றும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

உடனடியாக நடைமுறைக்கு வரும் 15

## தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யுங்கள்

### ஐ.நாவில் இந்தியா வலியுறுத்து

(ஜெனிவா)

- தமிழ் மக்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.
- 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும்.
- மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. அன்றைய தினம் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் மனித உரிமைகள் பேரவையின் பதில் உயர்ஸ்தானிகர் நாடா அல்-நஷீஃப்பின் உரையும், அதனைத் தொடர்ந்து உறுப்பு நாடுகளின் 15

## திருநெல்வேலி தனியார் விடுதியில் பூட்டிய அறைக்குள் சிறுமியின் சடலம்

### மயக்கமுற்றநிலையில் பாட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் உள்ள தனியார் விடுதியொன்றின் அறையில் இருந்து 12 வயது சிறுமி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன் சிறுமியின் பேர்த்தியார் மயக்கமுற்ற நிலையில் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, 04

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி

### நல்லூரில் விசேட வழிபாடு



(யாழ்ப்பாணம்)

தேசிய சிறைக் கைதிகள் தினத்தை முன்னிட்டு மிக நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 17 15

## நல்லைக்கந்தனின் சப்பறத் திருவிழா



## இலங்கையில் வெளிப்படையான நல்லிணக்கம் அவசியம்

### ஐ.நாவில் அமெரிக்கா



(கொழும்பு)

இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய, உள்ளடக்கிய, பக்கச்சார்பற்ற, வெளிப்படையான மற்றும் சுதந்திரமான நல்லிணக்க முயற்சிகளுக்கு அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது.

மனித உரிமைகள் பேரவையின் 54வது அமர்வில் ஜெனிவாவிலுள்ள ஐ.நாவுக்கான அமெ 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 22 . 01 . 1970

மறைவு 15 . 08 . 2023

கடந்த 15.08.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு

## அமரர் புஸ்பநாதன் திருலோகநாயகி (மாலா)

### (மணியம்மட உரிமையாளர்)

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 14.09.2023 வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் மணியம்மடம் செல்வச்சந்நிதி தொண்டைமானாறு இல் நடைபெற்று அஸ்தி செல்வச்சந்நிதி ஆற்றங்கரையில் கரைக்கப்படும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து அன்னாரது(மணியம்மடம்) இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீரகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக
ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மணியம்மடம்,
செல்வச்சந்நிதி கோவிலடி,
தொண்டைமானாறு.

தகவல்:
குடும்பத்தினர்

(C-7246)

வேலையாட்கள் தேவை

அலுவலக ஊழியர்கள் - O/L, A/L
தகைமையுடன்
வயது 20-30 (பெண்)
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்

(17068)

எங்களைத் தொடர்பு கொள்ள
SST சன்சக்தி ரேடர்ஸ்
# 395, கண்டி (ஏ9) வீதி, மாம்பழம் சந்தி, யாழ்ப்பாணம்
021 221 7994 077 593 0335
www.sunsakthy.com info@sunsakthy.com
www.facebook.com/sst.sunsakthy

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியை அழைப்பும்



கடந்த 16. 08. 2023 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தின் ஒளி விளக்கு

## அமரர் இராமசாமி சண்முகசுந்தரம்

### (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (14.09.2023) வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று தொடர்ந்து அவரது இல்லத்தில் 11. 30 மணியளவில் சபண்டீகரண கிரியையும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மா சாந்தி பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்


புலோலி வடமேற்கு,
புலோலி.

தகவல்: குடும்பத்தினர்
074 073 8309

(C-7245)

# மரண அறிவித்தல்

பிறப்பு 1957 . 02 . 06



இறப்பு 2023 . 09 . 12

## நாரயணசாமி செல்வம்

### (உரிமையாளர் S.S.M காட்வெயர்)

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை மற்றும் வள்ளிபுனம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நாரயணசாமி செல்வம் அவர்கள் 12.09.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்வராணி(யோகம்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பிரதீபன், மோகன் மற்றும் யசோதினி திலீபன்(அவுஸ்திரேலியா) தீபன், மதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகேந்திரம்(தீபன்அப்பா) அவர்களின் பாசமிகு சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 13.09.2023 பி.ப 2.00 மணியளவில் வள்ளிபுன இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெள்ளப்பள்ளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*தகவல் :*
குடும்பத்தினர்
077 867 2525

(17067)

# மரண அறிவித்தல்



## திரு.முருகுப்பிள்ளை நவரத்தினலிங்கம்

குரும்பைகட்டி புலோலி வடமேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.முருகுப்பிள்ளை நவரத்தினலிங்கம் அவர்கள் கடந்த (2023.09.11) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை - மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கிட்டிணப் பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் நவரத்தினலிங்கம் வசந்தா அவர்களின் பாசமிகு கணவரும் உதயதீபன், திவாகரன்(லண்டன்), கார்த்தீபன், கீர்த்தனன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஸ்ஷா, விதுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் அன்ன லிங்கம், இந்திராணி, செல்வலிங்கம், யோகலிங்கம், இராசலிங்கம், நேசலிங்கம் செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயரட்ணம், சிவச்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13.09.2023 புதன்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குரும்பைகட்டி,
புலோலி வடமேற்கு,
புலோலி.

*தகவல் :*
குடும்பத்தினர்
077 076 1812

(C-7249)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமியின் கை அகற்றப்பட்ட விவகாரம்

# தாதிய உத்தியோகத்தரின் தன்னிலை விளக்கம்

*யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட சாண்டில்யன் வைசாலி என்ற 8 வயதுப் பெண் குழந்தையின் கை அகற்றப்பட்டமை தொடர்பில் குறித்த விடுதியில் பணியாற்றிய தாதிய உத்தியோகத்தர் வலம்புரிக்கு அனுப்பி வைத்துள்ள தன்னிலை விளக்கம் இங்கு பிரசுரமாகிறது.*

*சம்பவத்துடன் தொடர்புபட்டவரின் கருத்தை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் மட்டுமே அவரின் தன்னிலை விளக்கம் இங்கு பிரசுரமாகிறது. (ஆ-ர்)*

ஜனனிரமேஸ் ஆகிய நான் கடந்த 2011 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை ஏறக்குறைய 12 வருடங்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடமை புரிந்து வருகின்றேன். குறித்த சிறு பிள்ளைகளுக்குரிய 12 ஆம் விடுதியில் ஏறக்குறைய 6 வருடங்களாகப் பணி புரிந்து வருகின்றேன்.

இதுவரை காலமும் என் மீதோ. எனது சேவை மீதோ எந்தவொரு குற்றச்சாட்டும் யாராலும் முன்வைக்கப்பட்டதில்லையென்பதை உறுதிப்படுத்திக் கூறுகின்றேன். அது மட்டுமன்றி தற்போது என் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டும் உண்மையல்லவென்பதும் குறித்த குழந்தையின் கை அகற்றப்பட்டமைக்கு நான் எவ்விதத்திலும் பொறுப்பாக மாட்டேன் என்பதையும் முதற்கண் மீண்டும் உறுதிப்படுத்திக் கூறுகின்றேன்.

சமூக வலைத் தளங்களும் உண்மையை வெளிக்கொணர வேண்டிய ஊடகங்களும் ஆதாரங்கள் எதுவுமின்றி என் தரப்பு நியாயங்கள் எதுவும் கேட்கப்படாமல், என் புகைப் படங்களைப் பதிவிட்டு என் நடத்தையைத் தவறாகச் சித்தரித்து என் மீது குற்றம் முழுவதையும் சுமத்தி என்னை வெளியே நடமாட முடியாதபடியும் எனது நாளாந்தக் கடமைகளைச் செய்ய முடியாதபடியும் என்னை மிகுந்த மனவுளைச்சலுக்கு ஆளாக்கியுள்ளார்கள்.

சமூக வலைத்தளங்களில் அதனை மறுத்து என் தரப்பு நியாயத்தை பதிவிடும் மனத் தைரியத்தை நான் இழந்துள்ளேன். மரணத்தை விஞ்சிய அவமானத்தை எனக்கும் என் குடும்பத்தவருக்கும் குறித்த சமூக வலைத்தளங்களும் ஊடகங்களும் ஏற்படுத்தியுள்ளன. என்னைக் கொலை காரியாகச் சித்தரித்துள்ளன.

உண்மையில் குறித்த பெண் குழந்தை 12 ஆம் விடுதியில் அனுமதிக்கப்பட்ட போது நான் கடமையில் இருக்கவில்லை. ஆனால் குறித்த பெண் குழந்தை சாதாரண காய்ச்சலால் அன்றி கடுமையான தோல் தொற்று நோயால் (Staphylococcal scalded skin syndrome) பாதிக்கப்பட்டு 12 ஆம் விடுதியில் உள்ள தனிமைப்படுத்தல் அறையில் அனு மதிக்கப்பட்டிருந்ததை எனது சக தாதிய உத்தியோகத்தர்கள் மூலம் நான் அறிந்து கொண் டதன் படி. குறித்த குழந்தை இரு கைகளிலும் கனுலா ஏற்றப்பட்ட நிலையில் நொதேண் தனியார் வைத்தியசாலையிலிருந்து 25.08.2023 ஆம் திகதியன்று இரவு 9.45 மணிக்கு எமது விடுதியில் இரவோடு இரவாக அனுமதிக்கப்பட்டிருந்தார். அனுமதிக்கப்பட்ட போதே இரு கைகளில் மட்டுமன்றி அவரின் கால்களிலும் வீக்கம் வெளிப்படையாகத் தெரியும் வண்ணம் இருந்ததாக எனது சக உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த 25 ஆம் திகதி குறித்த தனியார் வைத்தியசாலையினால் பொருத்தப்பட்டிருந்த கனுலாக்கள் ஊடாகவே குறித்த குழந்தைக்கு Vancomycin மற்றும் Augmantin ஆகிய மருந்துகள் ஏற்றப்பட்டிருந்தன. மறுநாளிலிருந்து வைத்திய நிபுணரின் ஆலோசனைப்படி குறித்த Vancomycin நிறுத்தப்பட்டு clindamycin மருந்து ஏற்றப்பட்டிருந்தது. 26 ஆம் திகதி நான் காலை மற்றும் மாலை கடமைகளில் இருந்த போதும் குறித்த குழந்தைக்கு ஊசி மருந்து ஏற்றும் செயலைச் செய்வதற்கு சந்தர்ப்பம் நேர்ந்திருக்கவில்லை.

குறித்த குழந்தை அதனது நோய்த்தன்மையின் காரணமாக தாதியரோ, வைத்தியரோ அருகில் சென்றால் அழும் இயல்பைக் கொண்டிருந்தது. 26 ஆம் திகதி இரவு புதிய கனுலாவொன்று குழந்தையின் இடது மணிக்கட்டின் உட்புறத்தில் வேறொரு தாதிய உத்தியோகத்தரால். பொருத்தப்பட்டிருந்தது. அந்த கனுலாவூடாகவே தொடர்ந்தும் மருந்துகள் ஏற்றப்பட்டிருந்தன. 27 ஆம் திகதி இரவுக் கடமையை ஏனைய இரண்டு தாதிய உத்தியோகத்தர்களுடன் சேர்த்து நான் பொறுப்பேற்றிருந்தேன். இரவு 10.45 மணியளவில் குறித்த குழந்தைக்கு ஊசி மருந்து ஏற்றுவதற்காக நான் குறித்த குழந்தையின் அறைக்குச் சென்ற போது குழந்தையும் தாயும் உறங்கிக் கொண்டிருந்தனர். நான் குறித்த அறையில் மின்குமிழை ஔிர விட்டு ஊசி போட வேண்டும் அம்மா எனக் கூறி விட்டு. குழந்தையின் கையைப் தொட்ட போது. குழந்தை எனது தாதிய உடையைப் பார்த்தும் ஊசி என்ற வார்த்தையைக் கேட்டும் அழத் தொடங்கியது. அந்நேரம் சேலைன் நிறுத்தப்பட்டிருந்தது. நான் பிள்ளையின் இடது. வலது கைகள் மற்றும் கால் வீக்கமாயிருப்பதை அவதானித்து பிள்ளையின் தாயாரிடம்; நீங்கள் வரும்போது வீக்கம் இருந்ததா என மூன்று தடவைகள் வினவியிருந்த நிலையில். தாயார் முதலே கைகள். கால்களில் வீக்கம் இருந்ததென்றும் வீக்கத்தோடேயே கனுலா போடப்பட்டதாயும் எனக்குத் தெளிவாகப் பதிலளித்திருந்தார். அதன் பின்னர் குழந்தையின் இடது கை மணிக்கட்டின் உட்புறத்தைத் திருப்பிப் பார்த்த போது. அதில் வீக்கம் எதுவும் தென்பட்டிருக்கவில்லை. கனுலா outline ஆக இருந்தால் மணிக்கட்டின் உட்புறத்தில் வீக்கம் அல்லது கட்டி ஏதாவது தோன்றும் என்பது எனது அனுபவத்தில் நான் கண்டதுண்டு. அத்தகைய அடையாளம் எதுவும் காணப்படாமையால் நான் முதலில் ஏற்ற வேண்டிய Augmantine மருந்தை ஏற்றி விட்டு 10cc saline water இல் கலந்து dilute செய்து நான் எடுத்து வைத்திருந்த 1cc clindamycin மருந்தை குறித்த நேர இடைவெளியில் மிகவும் மெதுவாக கனுலாவூடாக உட்செலுத்தினேன்.

குறித்த clindamycin மருந்தை நான் அதன் செறிவைக் குறைக்கும் வகையில் சேலைன் நீருடன் கலந்து ஏற்றவில்லை. நேரடியாகவே ஏற்றியதாக என் மீது குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது. குறித்த clindamycin மருந்தினை இதற்கு முன்னர் பல தடவைகள் பல சிறுவர்களுக்கு ஏற்றிய அனுபவம் எனக்கு உண்டு. அதனை சேலைன் நீருடன் சேர்த்து மெதுவாக ஏற்ற வேண்டும் என்பதும் எனக்குத் தெரியும். கனுலாவூடாக சிறிஞ்சில் குறித்த விகிதாசாரத்தில் கலந்தே நான் ஏற்றியிருந்தேன். அவ்விதம் நாம் ஏற்றுவது எமது வைத்தியசாலையில் வழமையே.

ஆனால் இப்பிரச்சினையின் பின்னர் அனைவரும் என் மீது குற்றம் சுமத்தும் நோக்கில் அவ்விதமான வழமையை மறுக்கின்றார்கள். குறித்த மருந்து ஏற்றியவுடன் பிள்ளை கை நோவதாகக் கூறிய போது. குறித்த மருந்து எரியும் இயல்புடைய மருந்தென்பதை தாயாருக்கு கூறி. சேலைன் 50 ml ஏறும் வகையில் குறித்த சேலைன் லைனை போட்டு விட்டால் எரிச்சல் குறையும் என கூறியபோது. வேண்டாம் என பிள்ளை அழுது கொண்டே மறுத்து விட்டது. அதன் பின்னர் நான் திரும்பி வந்து கை கழுவிக் கொண்டு நின்ற வேளையில் பிள்ளையின் தாயார் மீண்டும் ஒரு தடவை வந்து; பிள்ளை கை நோவால் அழுவதாகக் கூறியிருந்தார். அதன்போது நானும் எனது சக தாதிய உத்தியோகத்தரும் சென்று குறித்த 50 ml சேலைன் ஏறும் வகையில் லைனைப் பொருத்தியிருந்தோம். பிள்ளையின் அருகில் சென்ற சந்தர்ப்பங்களில் குறித்த கனுலா தவறாகப் போடப்பட்டிருப்பதற்குரிய அறிகுறிகளோ. அசாதாரணமான வீக்கங்களோ எதுவும் என்னால் அவதானிக்கப்படவில்லை. கையில் இருந்த வீக்கம் ஏற்கனவே இருந்ததாகத் தாயார் கூறியிருந்தார். அதன் பின்னர் எமக்கு எதுவித முறைப்பாடும் பிள்ளையின் தாயாரால் கிடைக்கப் பெறவில்லை. இதன் பின்னர் மற்றோர் தாதிய உத்தியோகத்தர் இரவு ஒரு மணி மற்றும் 2 மணிக்கு குறித்த பிள்ளையைப் பார்வையிட்ட நேரத்தில் தாயாரும் பிள்ளையும் உறக்கத்தில் இருந்ததாகவே தெரிவித்திருந்தார்.

பின்னர் மறுநாள் காலை 5.45 மணியளவில் HO ஒருவர் பிள்ளையை பார்வையிட்டு கனுலாவை கழற்றி மறுகையில் ஏற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கியிருந்தார்.

குறித்த கனுலா கழற்றப்பட்டு வலது கையில் ஏற்றப்பட்டு அதனூடாகவும் மருந்து ஏற்றப்பட்டது. அதன் பின்னரே பிள்ளையின் இடது கையில் அசாதாரண வீக்கம் அவதானிக்கப்பட்டதும் வைத்திய நிபுணருடன் தொடர்பு கொண்டு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

இதில் என் மீது வைக்கப்பட்ட மற்றைய குற்றச்சாட்டானது தாயார் முறைப்பாடு செய்த போது நான் சரியான கவனம் எடுக்கவில்லை. சென்று பார்க்கவில்லையென்பதாகும். தாயாருடன் சினந்தோ. சீறியோ பதிலளிக்க வேண்டிய எந்த அவசியமும் எனக்கு நேரவில்லை. அவர் தேடி வந்து முறையிட்டது ஒரு தடவை மட்டுமே. அதன்போது நான் நேரடியாகச் சென்று அவதானித்திருந்தேன். அவருடன் இந்த இரு சந்தர்ப்பங்கள் மட்டுமே எனக்கு கதைக்க நேர்ந்திருந்தது.

குறித்த கனுலாவூடாக நான்கு, ஐந்து தடவைகள் மருந்து ஏற்றப்பட்டதன் பின்னர் கடைசி மருந்தை ஏற்றியது நான் ஆவேன். கனுலா பொருத்திய விதம் தவறெனின் அதனை நான் எவ்விதம் அறிந்து கொள்ள இயலும். மற்றையது நான் ஏற்றிய சிறிய அளவுடைய மருந்தே குறித்த பிள்ளையின் கை அகற்றுவதற்குக் காரணமாகியிருந்ததென எந்தவொரு வைத்திய நிபுணரும் கூற இயலாது.

மேலும் வைத்தியசாலையில் நடைபெறும் உள்ளக விசாரணை ஒரு போதும் சுயா தீனமானதாக இருக்க இயலாதென்பதை உறுதிப்படுத்திக் கூறுகின்றேன். காரணம் குறித்த விசாரணைக் குழுவில் நியமிக்கப்பட்டிருக்கும் ஒரு வைத்திய நிபுணர் எமது விடுதிக்குப் பொறுப்பான வைத்திய நிபுணருடனும் குறித்த விடுதித் தாதிகள் ஆகிய எம்முடனும் காழ்ப்புணர்வு கொண்ட ஓர் நபர் ஆவார். இது வைத்தியசாலைப் பணிப்பாளருக்கும் நன்கு தெரியும்.

குறித்த விசாரணை அதிகாரி என்னிடம் விசாரணை செய்த பொழுது என்னை பதற்றப்படுத்தும் வகையில் ஆம் அல்லது இல்லையென மட்டும் பதிலளிக்குமாறு உறுக்கிய குரலில் வினவியே வாக்கு மூலம் பதிவு செய்திருந்தார். குறித்த வைத்திய நிபுணரின் வைத்திய விடுதியில் எனது சொந்தப்பிள்ளையை நான் வாந்தி, காய்ச்சல் காரணமாக அனுமதிக்க நேர்ந்திருந்த சமயத்தில் கூட, நான் அருகிலுள்ள விடுதியில் கடமையாற்றுபவள் என்பதைக் காரணம் காட்டி எனது விடுதிக்கு மாற்றும் வரையில் என் பிள்ளைக்கு 24 மணித்தியாலங்கள் ஆகியும் சேலைன் கூட ஏற்ற மறுக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயின் அவரால் எவ்விதம் பாரபட்சமற்ற விசாரணையொன்றை மேற்கொள்ள இயலும்?

அதுமட்டுமன்றி நான் அறிந்த வகையில் குறித்த பிள்ளை தோல் நோய் தொற்று மற்றும் காய்ச்சல் காரணமாக முதலில் கெங்காதரன் வைத்தியசாலையில் வைத்திய நிபுணரிடம் ஆலோசனை பெற்று அங்கேயே ஊசி மருந்தும் ஏற்ற ப்பட்டு கையில் கனுலாவுடனேயே வீட்டிற்கு அனுப்பப்பட்டு வீட்டிலிருந்து சென்று மருந்தேற்றப்பட்டுள்ளார்.

பின்னர் நொதேண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இரு கையிலும் கனுலா இடப்பட்டு மருந்தேற்றப்பட்டது. பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அக்கனுலாக்கள் ஊடாகவே யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒருநாள் முழுவதும் மருந்தேற்றப்பட்டது.

கையில் ஒட்டப்பட்ட பிளாஸ்ரர் உரித்து எடுக்கப்படும் போது பிள்ளையின் தோலும் சேர்ந்து உரிந்து வருகின்ற பாரதூரமான நிலைமை இருந்தது.

குறித்த பிள்ளையின் கை ஒட்சிசனின்றி. செயற்பாடின்றி செல்கள் அனைத்தும் இறக்கும் ஓர் நிலைக்குச் செல்வதற்கு குறைந்தபட்சம் 36 மணித்தியாலங்கள் தேவைப்படுமென்றால். யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருவதற்கு முன்னர் தனியார் மருத்துவமனைகளில் குறித்த பிள்ளையின் கையை பாதிக்கும் வகையில் கனுலாக்கள் போடப்பட்டதா? மருந்து ஏற்றப்பட்டதா. தவறான சிகிச்சையேதும் அளி க்கப்பட்டதா? என்பது தொடர்பில் இதுவரை எந்தவொரு விசாரணையும் செய்ததாக நான் அறியவில்லை.

எது எவ்வாறாயினும் இதற்கு மேல் எதுவித துன்பமும் தேவையில்லை என்ற அளவில் எனக்கு பாரிய அவமானம் ஏற்பட்டு விட்டது. மாறாக குற்றத்தை ஏற்றுக் கொள்ளுமாறு என்னை வைத்தியசாலை வட்டாரம் வற்புறுத்துகின்றது. எல்லா வழிகளாலும் என்னைப் பலவீனமாக்கி என்னைப் பலிக்கடாவாக்க முயலும் ஓர் காரியமே எனது புகைப்படத்தை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு தவறான செய்தி பரப்பும் செயலாகும்.

எனக்கும் இரு குழந்தைகளும் வயோதிபப் பெற்றோரும் உள்ளார்கள். குறித்த குழந்தைக்காக நானும் கடவுளிடம் இரந்து வேண்டியிருந்தேன். அதற்கு எந்தவொரு தீங்கும் நினைத்து நான் செயற்படவில்லை. என்னால் அதற்கு எந்தவொரு தீங்கும் நிகழ்ந்ததாகச் சொல்வதை நான் நம்பவில்லை. ஆனால் இப்பிரச்சினையால் நானும் எனது குடும்பத்தவருமே தற்கொலை செய்தால் என்ன என்ற அளவில் மனவுளைச்சலுக்கு ஆளாகியுள்ளோம்.

எனவே தகுந்த விசாரணைகளை மேற்கொண்டு உண்மையில் நிகழ்ந்ததைத் தெரியப் படுத்த வேண்டுமென்று வினயமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணியின் பந்துவீச்சை எதிர்கொள்ள திணறிய பாகிஸ்தான்



16ஆவது ஆசிய கிண்ண கிரிக்கெட்டில் தற்போது சுப்பர் 4 சுற்று ஆட்டங்கள் கொழும் பில் நடந்து வருகிறது.

சுப்பர் 4 சுற்றின் 3ஆவது ஆட்டத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் நேற்று முன் தினம் பலப்பரீட்சை நடத் தின.

இதில் நாணயச்சுழற்சி யில் வென்ற பாகிஸ்தான் முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி ரோகித் சர்மாவும் சுப்மன் கில்லும் இந்தியாவின் தொடக்க ஆட் டக்காரர்களாக களம் புகுந்த னர்.

இந்த ஜோடி முறையே 56 மற்றும் 58 ஓட்டங்களை குவித்து அசத்தினர்.

அடுத்து வந்த விராட் கோலி மற்றும் கே.எல். ராகுல் ஜோடி நிலைத்து நின்று ஆடியது. இடையில் மழை காரணமாக போட்டி நிறுத்தப்பட்டு மறு நாள் (நேற்று முன்தினம்) மதியம் தொடங்கியது.

ஆட்டத்தின் ஆரம்பத் திலே அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய விராட் கோலி மற்றும் கே.எல். ராகுல் ஜோடி சதம் அடித்து அசத்தியது. இதன்காரணமாக இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 356 ஓட்டங்களைக் குவித் தது.


இந்தியா சார்பில் விராட் கோலி 122ஓட்டங்களையும் கே.எல். ராகுல் 111 ஓட்டங் களையும் குவித்து ஆட்டமி ழக்காமல் களத்தில் இருந் தனர்.

பாகிஸ்தான் தரப்பில் ஷகீன் அஃப்ரிடி மற்றும் ஷதாப் கான் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

இதையடுத்து, 357 ஓட்டங் கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணி விளையாட தொடங்கியது. இதில், பக்கார் ஜமான் 27 ஓட்டங்கள், அகா சல்மான் மற்றும் இஃப்திகார் அகமது ஆகியோர் தலா 23 ஓட்டங் களும் பாபர் அசாம் 10 ஓட்டங் களும் இமாம் உல் ஹாக் 9 ஓட்டங்களும் ஷாஹீன் ஷாஹ் அஃப்ரிடி 7 ஓட்டங்களும் ஷாதாப் கான் 6 ஓட்டங்களும் ஃபஹீம் அஷ்ரப் 4 ஓட்டங் களும் முகமது ரிஸ்வான் 2 ஓட்டங்களும் எடுத்தனர்.

பாகிஸ்தான் அணியில் அடுத்தடுத்து விழுந்த விக்கெட்டால் பாகிஸ்தான் அணி 32 ஓவர்களில் 128 ஓட்டங் கள் மட்டுமே எடுத்து சுரு ண்டது. (6)

# சக அணி வீரரின் சாதனையை முறியடித்த விராட்கோலி



இந்தியா- பாகிஸ்தான் அணி களுக்கு இடையிலான ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரின் சுப்பர் 4 சுற்று ஆட்டம் நேற்று முன்தினம் கொழும் பில் நடைபெற்றது.

இதில் இந்திய அணி 228 ஓட்டங் கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. 94 பந்தில் 122 ஓட்டங்கள் விளாசிய விராட் கோலி ஆட்டநாயகன் விருதை வென்றார். இந்த போட்டியில் சதம் அடித்து 122 ஓட்டங்கள் குவித்த தன்மூலம்விராட் கோலி பல்வேறு சாத னைகள் படைத்துள்ளார்.

அவர் 98 ஓட்டங்களை தொட்ட போது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் டில் 13 ஆயிரம் ஓட்டங்களை பதிவு செய்தார். இதன்மூலம் குறைந்த இன் னிங்சில் விரைவாக 13 ஆயிரம் ஓட் டங்களை கடந்து சாதனை படைத் துள்ளார்.

இதற்கு முன் சச்சின் டெண்டுல்கர் 321 இன்னிங்சில் இந்த சாதனையை நிகழ்த்தியிருந்தார். தற்போது விராட் கோலி 267 இன்னிங்சில் இந்த சாத னையை நிகழ்த்தியுள்ளார்.

ரிக்கி பொன்ரிங் 341 இன்னிங்சி லும் குமார் சங்கக்கார 363 இன்னிங் சிலும் சனத் ஜெயசூர்ய 416 இன் னிங்சிலும் 13 ஆயிரம் ஓட்டங்களை கடந்துள்ளனர்.

மேலும் 8 ஆயிரம், 9 ஆயிரம், 10 ஆயிரம், 11 ஆயிரம், 12 ஆயிரம் ஓட்டங்களை குறைந்த இன்னிங்சில் எட்டியவர் என்ற சாதனையும் இவரது கைவசமே உள்ளது. மேலும் 47 சதங்கள் விளாசி சச்சினுக்கு அடுத்த இடத்தில் உள்ளார். சச்சின் டெண் டுல்கர் 49 சதங்களுடன் முதல் இடத் தில் உள்ளார். (6)

## பூட்டிய...

கடந்த 9ஆம் திகதி சனிக் கிழமை பிரஸ்தாப சிறுமியும் அவரது அம்மம்மாவும் திரு நெல்வேலியிலுள்ள தனியார் விடுதியில் அறை எடுத்து தங்கியுள்ளனர்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை சிறுமியின் அம்மம்மா மட்டும் வெளியில் சென்று வந்துள்ளார்.

அதன் பின்னர் இவர்கள் வெளியில் நடமாடவில்லை.

நேற்றைய தினம் அவர்கள் இருந்த மேல்மாடி அறையில் இருந்து துர்நாற்றம் வீசியுள் ளது.

இதனை அவதானித்த விடுதிப் பணியாளர்கள் குறித் அறைக்குச் சென்றபோது அறைக் கதவு உட்புறமாகத் தாழிடப்பட்டிருந்ததுடன் மின் குமிழ்களும் அணைக்கப்பட்டி ருந்தன.

இதனையடுத்து அறை யைத் திறந்து பார்த்தபோது, சிறுமி இறந்த நிலையில் கிடப் பதையும் அவரின் உடலில் இருந்து துர்நாற்றம் வீசுவதும் தெரிய வந்தது.

அதேநேரம் சிறுமியின் அம் மம்மா மயக்கமுற்ற நிலையில் கிடந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் உட னடியாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதுடன் யாழ்.மாவட்ட நீதவான் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதேவேளை பிரஸ்தாப சிறுமியும் அவரது பாட்டியும் மன்னாரைச் சொந்த இடமாக வும் தற்போது திருகோண மலையில் தங்கியிருப்பதாக வும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதுடன் பாட்டி யால் எழுதப்பட்டிருக்கலாம் என கருதப்படும் கடிதம் ஒன் றும் அறையிலிருந்து பொலி ஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ம)


## கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) பரந்தன்
## வாக்காளர் இடாப்பு மூடுதல் 30.06.2022

30.06.2022இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான வாக்காளர் இடாப்பு மூடப்பட்டுள்ளது. இவ் இடாப்புக்கள் அங்கத்தவர்களின் ஆட்சேபனையைப் பெறுவதற்காக 09.09.2023 தொடக்கம் 23.09.2023 வரை பின்வரும் இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது,

| இல | கிளையின் பெயர் | கிளை இலக்கம் | பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இடம் |
|---|---|---|---|
| 01 | பரந்தன் | 01 | பரந்தன் கோப்சிற்றி |
| 02 | கண்டாவளை | 05 | கண்டாவளை கிளை நிலையம் |
| 03 | தருமபுரம் | 15 | தருமபுரம் கோப்சிற்றி |
| 04 | கல்மடுநகர் | 17 | கல்மடுநகர் கிளை நிலையம் |
| 05 | இரணைமடு மேற்கு | 02 | கிராம சேவையாளர் அலுவலகம், பன்னங்கண்டி |
| 06 | முரசுமோட்டை | 03 | கிராம சேவையாளர் அலுவலகம், முரசுமோட்டை |
| 07 | ஊரியான் | 04 | கிராம சேவையாளர் அலுவலகம், ஊரியான் |
| 08 | புளியம்பொக்கணை | 07 | கிராமசேவையாளர் அலுவலகம் நாகேந்திரபுரம், பெரியகுளம். |
| 09 | கல்வெட்டித்திடல் | 08 | கிராம சேவையாளர் அலுவலகம், புளியம்பொக்கணை |
| 10 | புன்னைநீராவி | 09 | கிராம சேவையாளர் அலுவலகம், புன்னைநீராவி |
| 11 | பிரமந்தனாறு | 16 | கிராம சேவையாளர் அலுவலகம், பிரமந்தனாறு |
| 12 | உமையாள்புரம் | 10 | கிராம சேவையாளர் அலுவலகம், உமையாள்புரம் |
| 13 | தட்டுவன்கொட்டி | 11 | கிராம சேவையாளர் அலுவலகம், தட்டுவன்கொட்டி |
| 14 | ஆனைவிழுவு | 12 | கிராம சேவையாளர் அலுவலகம், ஆனைவிழுவு |
| 15 | குமரபுரம் | 13 | கிராம சேவையாளர் அலுவலகம், குமரபுரம், குமரபுரம் பொதுநோக்கு மண்டபம் |
| 16 | பொறிக்கடவை | 14 | குஞ்சுப்பரந்தன்பொதுநோக்கு மண்டபம் |

அங்கத்தவர்கள் ஆட்சேபனைகள் எதுவும் இருப்பின் 26.09.2023க்கு முன் செயலாளர், கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பரந்தன் எனும் முகவரிக்கு எழுத்துமூலம் அல்லது நேரடியாக தெரியப்படுத்தி வாக்காளர் இடாப்பை பூர்த்தி செய்ய உதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

செயலாளர்
கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம்
பரந்தன்

(C-7247)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்
ஓம் முருகா

## நல்லைக் கந்தன் வேலவன் பதியில் அழகுமிகு தேரில் எழுந்தருளி அருள்மிகு வள்ளி தெய்வானை உடன் உறை ஆறுமுகப்பெருமானே அடியேன்களுக்கு திருநீறு அணிந்து ஆசாரசீலராக அமைதியுடன் நல்வாழ்வு வாழ திருவீதியில் உலா வருக உலா வருக "சுப்பிரமணியம் ஓம்"



**சிகர மருந்த வாழ்வது சிவஞானம்**
**சிதறியலைந்து போவது செயலாசை**
**மகர நெருங்க வீழ்வது மகமாய**
**மருவி நினைந்திடாவருள் புரிவாயே**
**அகர நெருங்கி னாமய முறவாகி**
**அவசமொடுங்கையாரொடு முனமோகிக்**
**ககன மிசைந்த சூரியர் புகமாயை**
**கருணை பொழிந்து மேவியப் பெருமாளே**
**திருப்புகழ் 654**

"சிவாயநம" என்னும் பஞ்சாட்சாச்சரத்தில் உன்னை என்றும் மகாமநுலை உச்சரிப்பதனால் உண்டாகும் சிவஞானமாம் "ம" என்றும் எழுத்து நெருங்குவதால் மகமாயை சிதறுண்டு அலைந்து அழிந்து போகும்.

முருகனை மருவி தியானித்து ஐந்தெழுத்தை மனதில் சதா ஓதி நினைந்திட அருள் புரிவாயே கருணை பாலித்து வீற்றிருக்கம் பெருமாளே.

### திருமூலர் வாக்கு திருநீறு தெய்வீகம்

**கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை**
**மங்காமல் பூசி மகிழ்வீரே ஆமாகில்**
**தாங்கா வினைகளும் சாரும் சிவகதி**
**சிங்காரமான திருவடி சேர்வீரே**
**திருமூல ஞானத் தெளிவுடை**
**தெருவுக்கு ஒரிருவர் இருந்தாலும்**
**தமிழர் வாழ்வு சிறக்கும் வழிபிறக்கும்**

எம்பெருமான் மேனியில் பூசப்பட்ட திருநீறு உயிர் காக்கும் கவசம். நாங்களும் ஒளி மங்காது, குறையாது அவ்வப்போது நெற்றியில் பரவி அணிவோமானால் எங்களை ஒரு தீவினையும் வந்தடையாது அல்லாமலும் நாமும் சிவப்பேறடைவோம்.

### இறைவன் திருவடியே திருநீறு

**"வெள்ளை நீறணி மேனியவர்க்கெலாம்**
**உள்ள மாய பிரானர் உறைவிடம்"**

**சிவபெருமான், திருவெண்ணீறு தரித்து மேவும்**
**பக்தர்களுக்கெல்லாம் பேரருள் நல்குவராகவும்**
**உள்ளத்தில் ஒளிர்பவராகவும் தமது உறை**
**விடமாகக் கொண்டு இருப்பவர் என திரு**
**நாவுக்கரசர் 203 ஆவது ஐந்தாம் திருமுறையில் தேவாரம் ஆகும்.**

**"என்னில் ஆரும் எனக்கினி யாரில்லை**
**என்னிலும் இனி யான் ஒருவன் உளன்"**

என்னை விட எனக்கு யார் இருந்தும் இனிமையை செய்ய இயலும் யாரும் இல்லை. என்றாலும் என்னை விட அன்பால் இனிமையுடையவர் ஒருவர் உளர். அவர் என்றும் விளங்கும் உயிர்ப்புச் சக்தியாய் உள்ளும் புறத்திலும் காப்பவர் இறைவன் என நாவுக்கரசர் ஐந்தாம் திருமுறையில் 205 ஆவது திருத்தேவாரம் உணர்த்தும்.

ஆகவே திருக்கோயில்களில் ஆண்டு விழாக்களில் இறைவன் உயிர்களுக்கு வீடுபேறு அருளுதற் பொருட்டு, தரிசிக்கச் செல்லுவோர். உண்மைப்பொருளை உணர்ந்து **ஆசாரசீலராய்** நிவேதனப் பொருட்களுடன் சென்று சிவாச்சாரியரை குருவாக எண்ணி வழிபட்டு அவர் செய்யும் **தம்ப விம்ப கும்ப** பூசைகளை மெய்யன் போடு தரிசித்தல் வேண்டும். (தம்பம்-கும்பம், விம்பம் மூர்த்தியின் திருவுருவம்)

ஆலயத் திருவிழாக்களில் வழிபடுகின்ற எல்லோருக்கும் திருவருள் பாலிக்கும் தீக்கை காலமெனப்படுவதால், எல்லோரும் தம்மை குருதீக்கையால் வீடுபேறடையும் சீடனாக பாவித்து **மனமொழி மெய்களை முருகனுக்காக்கி உலகத்து சிந்தை உலகத்துச் செயல்கள் இன்றி மெய்யன்போடு நிறையத் தொழுது, திருமுறைகள் ஓதி** பேரின்பத்திலே நிறைதல் வேண்டும்.

**"ஓம் நமசிவாய"**

இவ்விழாவில் கொடிமரம் பதியாகிய சிவத்தைக் குறிப்பதாகும். அதில் ஏற்றப்படும் கொடிச்சீலை பசுவாகிய உயிரைக் குறிப்பதாகும். கொடிச்சீலையோடு சேர்ந்திருக்கும் தருப்பைக் கயிறு உயிரை வருத்தும் பாசமாகும். கொடியேற்ற விழாவில் தருப்பைக் கயிற்றுடன் கொடிச்சீலையை கொடிமரத்தில் சுற்றுவது முத்தி நிலையில் பாசம் ஒடுங்கி உயிர் சிவத்துடன் கலந்து பேரின்பம் அடையும் என்பதையும் சிவமும் உயிரும் இரண்டறக் கலந்த ஒரு பொருளாம் என்பதையும் குறிப்பதாகும். வேறொரு வெண்மையான கயிறு, கொடிக்கயிறு திருவருட் சக்தியைக் குறிக்கும்.

உயிர்கள் நிலையாமை உணர்ந்து பற்றறுத்து மலபரிபாக மெய்திச் சத்திநிபாதமுற்று எண் குணங்களும் விளங்கப் பெற்று பத முத்திகளை விரும்பாது இறைவனோடு இரண்டறக் கலந்து சாயுச்சிய முத்தியடைதலை உலகிற்கு விளக்கிக் காட்டுதற் பொருட்டு நம் முன்னோர் ஆண்டு விழாக்களை செய்வாராகினர்.

இறைவனிடத்தில் பேரன்பு கொண்டு எல்லாத் திருவிழாக்களிலும் கலந்து திருமுறைகளை ஓதி இறைவன் தரிசனத்தால் அருள் விளக்கத்தை அடைந்து உயிர் பிறப்பு, இறப்புக்களை நீக்கி ஆண்டு நின்றவாறே வீடுபேற்றை அடையும். இடையறாது முருகப் பெருமானை வந்திதும் வாழ்த்தியும் சிந்தித்தும் அன்பு செய்து தரிசிக்க எமபயம் ஒருபோதும் இல்லை.

பூமியிலுள்ள அடியார்களாக மானுடரும் விண்ணவரும் சித்தர்களும் யோகிகளும் எல்லோரும் தங்களது விருப்பங்களை நிறைவேற்ற வள்ளி தெய்வானை உடனுறை ஆறுமுகப் பெருமானே உயிர்களைப் பாதுகாக்கும் அரசே நல்லைக் கந்தனே நற்கதி தரும் நன்னெறி தருக முருகனே. **பெரும் யோகிகள் திருவடிகள் பதித்த திருவீதியில் உலா வருக உலா வருக.** கந்தர் அனுபூதி, திருப்புகழ், திருவாசகம் இனிமையை நுகரும் ஆறுமுகப்பெருமானே அழகுமிகு தேரில் எழுந்தருளி வருக.

**செந்தமிழின் இனிமையை முழுவதும் உண்டு**
**சுவைத்த முருகப் பெருமான் சுப்பிரமணியனுக்கு வணக்கம்**

விநாயகர் அகவல் ஓதி வினைகள் நீக்குவோம்.
நல்லைக்கந்தன் திருப்புகழ், கந்தர் அனுபூதி ஓதி நற்கதி பெறுவோம்.
சிதம்பரத்தான் சிவபுராணம் ஓதி சிவகதி பெறுவோம்.
தில்லைக் கூத்தன் திருமுறைகளை ஓதி திருவடி அடைவோம்
அபிராமி அந்தாதி ஓதி அபர ஞானம் பரஞானம் பெறுவோம்.
"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்"

**தெய்வீகத் துதியை ஓதி பக்தியுடன் முருகனை**
**வழிபடுகிறானோ அவன் பிள்ளைப்பேறு,**
**மனைவி, செல்வம், நீண்ட ஆயுள்**
**எல்லா நற்பேறு பெற்று முடிவில்**
**ஸ்கந்த ஸாயூஜ்யத்தை அடைவோம்.**
**"ஓம் ஸ்கந்தா சரணம்"**

(C-7293)





**க.கு.க.சிவபாலன் (K.K.K)**
**ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசர் மடாலயம் போசகர்**

---

# இராசிபலன்

13.09.2023
ஆவணி 27, புதன்கிழமை
சதுர்த்தசி பின்னிரவு 5.48 மணிவரை
மகம் பின்னிரவு 3.53மணிவரை

சுபநேரம் -4.33-6.03 மணிவரை
இராகுகாலம்-12 .3-1.33 மணிவரை
போதாயன அமாவாசை
நல்லூர்க் கந்தன் தேர்

சந்திராஷ்டமம்-
திருவோணம்.

**வளவன்**

**மேஷம்** – பிள்ளைகள் குடும்பப் பொறுப்புக்களறிந்து நடந்து கொள்வர். புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** – வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** – இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்,போசன சுகமுண்டு.

**கடகம்** – குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**சிம்மம்** – நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், குடும்பச் சுமை கூடும் நாள், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி** – ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்,உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்க வேண்டிய நாள்.

**துலாம்** – எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம்,காரிய அனுகூலமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்** – தொட்ட காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்,சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், செய்தொழில் மேன்மையுண்டு, பிறர் உதவியுண்டு.

**தனுசு** – உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பயணங்கள் கைகூடும்.

**மகரம்** – பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை,குடும்பத்தினரிடையே வீண் விவாதங்களைத் தவிர்த்துக் கொள்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.

**கும்பம்** – மதிநுட்பத்தில் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்** – உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள்.

காலம் எல்லாவற்றையும் தீர்மானம் செய்கின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச் சூழலில் சுற்றாடல் விழிப்புணர்வு



(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவர்களால் நல்லூர் ஆலய சூழலில் நேற்று முன்தினம் சுற்றாடல் விழிப்புணர்வு முன்னெடுக்கப்பட்டது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையும் கல்வி அமைச்சும் இணைந்து பாடசாலைகள் தோறும் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்ட மாணவர்கள் பல்வேறு சுற்றாடல் சார் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு தமது அறிவை வளர்த்துக் கொள்வதோடு பிறரையும் சுற்றாடலின் மீது கருணை கொள்ள வைக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள்.

இதன் ஓர் அங்கமாக நல்லூர் கந்தன் மஹோற்சவ காலத்தில் கடந்த சில நாட்களாக பொலித்தீன் பை பயன்படுத்துபவர்களை துணிப்பைக்கு மாறுவதற்கான வழிகாட்டல்களை மேற்கொண்டு வருகின்றார்கள்.

அத்துடன் அவர்களிற்கு இலவசமாக துணிப்பையும் வழங்கி வருகிறார்கள். இந்த நிலையில் நேற்று முன்தினம் அச்சுவேலி மத்திய கல்லூரியைச் சேர்ந்த சுற்றாடல் முன்னோடி சிறார்கள் நல்லூர் சூழலில் சுற்றாடல் விழிப்புணர்வில் ஈடுபட்டனர். (நி-4-33)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தால் நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு நடத்தப்படும் தெய்வீக இசையரங்கு நிகழ்வு நாளை 14 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு இடம்பெறும்.

இதில் யாழ். இராமநாதன் அரங்காற்றுகை கட்புலக்கலைகள் பீடத்தினால் மாலை 6.45 மணிக்கு குழு இசை நடத்தப்படவுள்ளது.

வயலின்-கே.வேலதீபன், மிருதங்கம்-மு.சுலக்சன், கஞ்சிரா-கபில்ராஜ் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து 7.15 மணிக்கு இடம்பெறவுள்ள நடன அரங்கு நிகழ்வினை நட்டுவாங்கம்-ஸ்ரீதேவி கண்ணதாசன், பாட்டு-எம்.எஸ்.பிரதீபன், மிருதங்கம்-ம.லோகேந்திரன், வயலின்-அ.ஜெயராமன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அத்துடன் நாளை மறுதினம் 15 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு இளங்கலைஞர் மன்ற மாணவர்கள் வழங்கும் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.45 மணிக்கு அளவையூர் கலைவாணி வில்லிசைக் குழு வழங்கும் வில்லுப்பாட்டு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (நி)

# ஒளிராத தெரு விளக்குகளை விரைவில் மாற்றியமைக்குக

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட கோவிற்குடியிருப்பு வட்டாரத்தில் ஒளிராத நிலையில் காணப்படுகின்ற தெருவிளக்குகளை விரைவில் மாற்றியமைக்குமாறு கோவிற்குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் சாவகச்சேரி நகரசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக கோவிற்குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவிக்கையில்,

கடந்த இரு மாதங்களுக்கு முன்பாக எமது கிராமத்தில் தெரு விளக்குகள் மாற்றப்பட வேண்டிய இடங்களை அடையாளப்படுத்தி நகரசபைக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருந்தோம். இருப்பினும் இதுவரை கோரிக்கை கடிதத்திற்கு நகரசபையால் எவ்வித மான பதிலும் அனுப்பப்படவில்லை. தெரு விளக்குகளும் திருத்தப்படவில்லை.

மாரி காலம் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் திருட்டுக்கள், விபத்துக்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான பிரச்சினைகளைத் தவிர்க்கும் முகமாக ஒளிராத நிலையில் காணப்படுகின்ற தெரு விளக்குகளை மாற்றியமைக்க வேண்டியது அவசியமானதாக காணப்படுகிறது. எனவே விரைவில் இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-4-30)

# அறநெறி பாடசாலை மீள ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையினால் மீளவும் அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப்படவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ள இவ் அறநெறி வகுப்புகள் மாலை 5 மணி வரை நடைபெறும். ஆர்வமுள்ள சகல மாணவர்களையும் பங்குபற்றுமாறு அறிவித்துள்ளனர். (நி)

# போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த யாழில் விசேடகுழு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை மற்றும் பரவலை கட்டுப்படுத்துவதற்கு மாவட்ட மட்டத்திலான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் குறித்த குழு அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அரசாங்க அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள், பொலிஸார் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் உள்ளடக்கப்பட்டுள்ள குறித்த குழுவின் ஊடாக தகவல்களை பரிமாறி நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாணத்தில் புனர்வாழ்வு நிலையம் அமைப்பது தொடர்பாகவும் கருத்து தெரிவித்தார்.

மேலும், யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வனவளப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் சட்டவிரோத மணல் அகழ்வினை கட்டுப்படுத்தல், முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்துவது உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. (நி-4-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 180 | 150 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 500 | 500 |
| தக்காளி | 200 | 200 | 100 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 200 |
| கோவா | 180 | 150 | 180 | 200 |
| கரட் | 350 | 300 | 300 | 300 |
| பூசணி | 80 | 80 | 70 | 80 |
| புடோல் | 100 | 70 | 100 | 150 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 200 |
| சின்ன வெங்காயம் | 280 | 260 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 450 | 400 | 300 | 400 |
| வெண்டக்காய் | 100 | 140 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 450 | 300 | 200 | 250 |
| லீக்ஸ் | 160 | 150 | 180 | 200 |
| பீற்றூட் | 200 | 160 | 150 | 200 |
| கறிமிளகாய் | 250 | 300 | 200 | 250 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 100 | 80 |
| போஞ்சி | 450 | 400 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 100 | 120 | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 60 | 120 |
| தேசிக்காய் | 800 | 700 | 1000 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 400 | 400 | 400 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 280 | 400 |
| முள்ளங்கி | 100 | 80 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 70 | 80 |
| வல்லாரை | 40 | 30 | 40 | 80 |
| ஈரப்பலா | 80 | 70 | 50 | 120 |

## க.பொ.த உ/த பரீட்சை பெறுபேறுகள்-2022 (2023)

### யா/இராமநாதன் கல்லூரி

**பொறியியல் துறை**

த.காவியா-3A

**உயிரியல் துறை**

ப.கலைப்பிரியா-2AB

**வணிகத்துறை**

சி.லாவண்யா-3A, எஸ்.கவியரசி-A2B

**கலைப்பிரிவு**

ப.திருமகள்-3A, வி.சரண்யா-3A, கே.லோஜினி-3A, என்.சுவேத்தா-2AB, வை.கஜானா-2AB, ரி.டேவிகா-2AB, ரி.லோஜனா-2AB, எஸ்.தமிழ்நிலா-2AB, கே.கீர்த்தனா-2AB, ஆர்.கஜனி-2AB,

### யா/வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

**உயிரியல் விஞ்ஞானம்**

எஸ்.சகீந்தன்-3A, கு.கீதாஞ்சலி-3A, ஏ.திஷாங்கன்-3A, வி.தனுசிகா-2AB.

**பௌதீகவியல்**

கே.யதுசன்-2AB, பி.திரிகரன்-2AB, எ.செந்தூரன்-2AB, பி.நிருஷன்-2AB

**வர்த்தகம்**

ஏ.அனுஜாபாத்-2AB

### யா/விக்ரோறியா கல்லூரி

**உயிரியல் விஞ்ஞானம்**

பி.வித்தகி-3A

**வர்த்தகம்**

இ.தீபிகா-3A, பி.மதுரா-2AB, பா.பத்மஜா-2AB

### யா/மல்லாகம் மகா வித்தியாலயம்

**கலைப்பிரிவு**

உ.அனித்தா-3A, தி.விதுசனா -2AB

**வர்த்தகப் பிரிவு**

ப.அனுசன்-3A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குத்தொடுவாய் விடயத்தை உரிய முறையில் கையாள வேண்டும்

## கனடா வலியுறுத்து

(ஒட்டாவா)

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட பாரிய மனித புதைகுழி தொடர்பான விடயத்தை அரசாங்கம் உரிய முறையில் கையாள வேண்டும் என கனடா வலியுறுத்தியுள்ளது.

புதைகுழி தொடர்பான விசாரணைகள் நம்பத் தகுந்த வகையில் அமைய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது இலங்கையில் சமாதானம் மற்றும் சுதந்திரத்தை பேணுவது குறித்து கனடா, தொடர்ந்தும் கவனம் செலுத்தும் எனவும் ஐக்கிய நாடுகளுக்கான கனேடிய பிரதிநிதி குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# ரயில் அத்தியாவசிய சேவையாக மாற்றப்படும்

## அமைச்சர் அதிரடி அறிவிப்பு



(கொழும்பு)

முதல் ரயில் அத்தியாவசிய சேவையாக மாற்றப்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர், இது தொடர்பான பிரேரணை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவித்தார்.

இதன்படி இன்று முதல் மக்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் தவிர்க்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (நி)

# 1905 அதிகாரிகள் குற்றங்களை முறையிட விசேட தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)

அரசாங்க அதிகாரிகள் தொடர்பான குற்றச்சாட்டுகளை முறைப்பாடு செய்வதற்கு விசேட தொலைபேசி இலக்கமான "1905" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த தொலைபேசி இலக்கம் ஊடாக மாவட்ட, பிரதேச செயலகங்கள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ்வரும் ஏனைய நிறுவனங்களின் அதிகாரிகள் தொடர்பான முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

பொதுமக்களால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகளுக்குத் தீர்வு காண கூடுதல் செயலாளர் தலைமையில் சிறப்புக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. அத்துடன் முறைப்பாடுகளுக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என்றும் புலனாய்வு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த மேலும் தெரிவித்துள்ளார். (6)


PEOPLE'S BANK

**தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்**

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 30.06.2022 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 13.10.2023 (வெள்ளிக்கிழமை), 14.10.2023 (சனிக்கிழமை) திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

யாழ்.ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), தெல்லிப்பளை, மல்லாகம், காங்கேசன்துறை, யாழ்.பிரதான வீதி, உரும்பிராய், ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, புத்தூர், சங்கானை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், கோப்பாய், அளவெட்டி, சாவகச்சேரி, கைதடி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி, கல்வியங்காடு, யாழ்.கன்னாதிட்டி, இணுவில், பருத்தித்துறை, புலோலி, கொடிகாமம்.

நகை மீளெடுப்பதற்கான இறுதித் திகதி : 12.10.2023
ஏலவிற்பனை நடைபெறும் இடம் : யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை
திகதி : 13.10.2023(வெள்ளிக்கிழமை)
14.10.2023 (சனிக்கிழமை)

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல : 021-222 2601
தொலைநகல் : 021-222 2602
மின்னஞ்சல் : jafrho@peoplesbank.lk

(C-7240)





# ஆடுகிற மயில் அழகா? அருள்பொலியும் வேல் அழகா?

உலகமெலாம் இருந்தடியார் ஓடிவர நல்லூரில்
நிலமதுவே மறைந்திடுமாம் நினைவதனில் கந்தனவன்
அழகதனை நினைந்துருகி அடியரெலாம் அழுவதனால்
வளம்பெருகி யாழ்ப்பாண மண்ணில் நதி ஓடுமாம்
உளம் உருகி அடியார்கள் உண்ணாமல் தமைவாட்டும்
விரதமதால் அக்கினியின் விரிசோதி பரவிடுமாம்
வளம் பெருகும் நல்லூரின் வடிவதனால் விண் மகிழ
தளம் குளிரும் தென்றலெனத் தான் வருவான் கந்தனவன்

ஆடுகிற மயில் அழகா ? அருள்பொலியும் முருகனவன்
வேலினது ஒளி அழகா? வெற்றிதனை உரைத்தே தான்
கூடுகிற கொடியிருக்கும் குக்குடத்தின் நிமிர் அழகா?
ஆடிவரும் தெய்வானை அன்னையவள் வடிவழகா?
ஓடுகிற விழியதனால் உவப்புடனே கந்தனையே
தேடுகிற வள்ளியவள் திருமுகத்தின் ஒளி அழகா?
நாடுகிற அடியவரின் நலம் அழகா? நல்லூரில்
ஆடிவரும் தேர் அழகா? ஆரறிவார் அற்புதத்தை!

பாருருண்டு பிரதட்டை பண்ணுகிற இளையர்தம்
மேலதனில் வீதியதன் வெண்மணல்கள் தான் தேங்கி
ஊரதெலாம் பரவுவதால் ஒப்பற்ற முருகன் அவன்
பேரருளும் பலர் மகிழப் பெயர்ந்திடுமாம் தரணியெலாம்
நீறுடைய நெற்றியுடன் நிலம் விழுந்து அடியளக்கும்
சீருடைய மங்கையர்தம் திருநெற்றி பதிந்துவரும்
வீறுடைய நல்லூரான் வீதிதனில் மண்ணதனால்
பாரினிலே திருவருளும் பரவிவர பலர் மகிழ்வார்!

கந்தனவன் கொடியதனில் களிப்புடனே பறக்கின்ற
விந்தைமிகு சேவலதும் வெற்றிதனைத் தானுரைக்கும்.
பந்தமுறத் திசையெல்லாம் பரவி நிதம் கண்ணீரால்
கந்தனையே தேடுகிற கற்றாரும் மனமுருகி
முந்தி அவன் பெயர் அதனை முழங்கிடவே மூவுலகும்
அந்தமிலா இன்பதனில் அமிழ்ந்திடுமாம் அறுமுகனை
புந்தியிலே பதித்தேதான் போற்றிடலோ யாவர்க்கும்
நிந்தையிலாப் பெருவாழ்வு நேர்வதனை உலகறியும்

"கம்பவாரிதி" இலங்கை. ஜெயராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 197

## விடா முயற்சியின் பலன்

ஒரு கிராமத்தில் ஆசாரி ஒருவர் வாழ்ந்து வந்தார். மர சாமான்கள் செய்து விற்று பிழைப்பு நடத்தி வந்தார். அவருக்கு அன்பும் அழகும் நிறைந்த மனைவி இருந்தாள். அவன் வாழ்க்கை உழைப்பும் காதலும் ஊடலுமாக மகிழ்ச்சி வெள்ளமாய் ஓடிக் கொண்டிருந்தது.

எல்லாக் கதைகளிலும் வழக்கமாக வருவது போல் நம்ம ஆசாரி வாழ்க்கையிலும் சோதனைக் காலம் வந்தது. நவநாகரீக காலத்தின் துவக்கமாய் இருந்த நேரம் அது. ஆசாரி பட்டறை தொழில் நலிவுற்றது. வருமானம் நாளுக்குநாள் குறைந்து கொண்டே வந்து அன்றாட உணவுக்கே வறுமை என்ற நிலை வந்து விட்டது.

ஒருநாள் மாலை வேளையில் மனைவியின் மடியில் தலைசாய்த்து வானத்து நட்சத்திரங்களை பார்த்துக் கொண்டிருந்தான். மனதில் எதிர்காலம் குறித்த கவலைகள் எழுந்து கண்ணீர் துளிகளாய் வழிந்து கரைந்தோடியது. அதைக் கண்ட மனைவி தழுதழுத்து ஆறுதலாய் பேசினாள்.

“ஐயா எஞ்சாமி எதுக்கு கலங்குறீங்க. இந்த தொழில் இல்லைன்னா என்ன பக்கத்து காட்டுல போய் விறகு வெட்டி அதை அக்கம் பக்கத்து கிராமத்துல வித்தா நாலு காசு கிடைக்குமே. அதை வெச்சு ராசாவாட்டம் வாழலாமே” என்றாள். புதுநம்பிக்கை, புதுஉற்சாகம் உள்ளத்தில் ஆசாரி விறகுவெட்டி ஆனான். அந்தத் தொழிலில் ஓரளவு வருமானம் கிடைத்தது.

“பட்டறைத் தொழில் நல்லாயிருந்த காலத்தில் நம்ம வீட்டில் தெனந்தெனம் நெல்லுச்சோறும் தினம் ஆறுசுவை கொழம்புமாய் இருக்கும். இப்போ இப்படி வயித்தக்கட்டி வாழுறோமே என மனைவி கேட்க இப்படி விறகு சுமந்துகிட்டு ஊர் ஊரா சுத்தினால் கிடைக்கிற வருமானம் நமக்கு நல்லபடியா வாழ பத்தலையே என்றவனுக்கு கண்கலங்கவும் தவித்துப் போனாள் அவள். “வேணாஞ்சாமி வேணாம், நீங்க ஏங் குலசாமி, கண்ணு கலங்காதீக, என்னோட நகை நட்ட வித்தா கொஞ்சம் காசு கிடைக்குமே. அதை மூலதனமா போட்டு நாம ஒரு விறகுக் கடை வச்சிரலாம். காட்டுல விறகு வெட்டுற ஜனங்களுக்கு கூலி கொடுத்து விறகு வாங்கிப் போடுவோம். எந்த நேரமும் ஜனங்க விறகு வாங்க வருவாங்க. நமக்கு நல்லபடியா வருமானம் கிடைக்கும் என்றாள்.

மீண்டும் புத்துணர்ச்சி நமது ஆசாரி உள்ளத்தில் விறகு வெட்டியானவன் விறகுக்கடை முதலாளியானான். வருமானம் பெருகியது. அப்புறமென்ன வீட்டில் தினமும் ஆறுசுவை சோறுதான். ஆனால் வாழ்க்கை அடுத்தடுத்த சோதனைகளை ஏற்படுத்தாமல் விட்டுவிடுமா என்ன. வந்தது கெட்ட நேரம். விறகுக் கடையில் தீ விபத்து. அத்தனை மூலதனமும் கரிக்கட்டையாகி விட்டது. தலையில் அடித்துக் கொண்டு அழுதான் விறகுக் கடை முதலாளி. நண்பர்கள் பலரும் வந்து ஆறுதல் சொன்னார்கள். கலங்காதே நண்பா மறுபடியும் விறகுவெட்டி வாழ்க்கை நடத்து.

எதிர்காலத்தில் ஏதாவது நல்லது நடக்கும் என்றார்கள். மனைவி வந்தாள். கண்ணீரை துடைத்தாள். அவன் தலைசேர்த்து நெஞ்சோடு கட்டியணைத்தாள். கண்ணீர் மல்க சொன்னாள் .“இப்போ என்ன ஆயிடுச்சுனு எஞ்சாமி அழுறீங்க. விறகு எரிஞ்சு வீணாவா போய்ட்டு. கரியாத்தானே ஆகியிருக்கு” நாளையிலிருந்து கரி வியாபாரம் பண்ணுவோம்” தன் தலை நிமிர்த்தி அவளின் முகம் பார்த்தவனுக்கு மீண்டும் வாழ்வில் ஒளி தெரிந்தது. “ஊக்குவிக்கவும் உற்சாகப்படுத்தவும் ஆட்களிருந்தால் கோமா ஸ்டேஜ்ல இருக்கவன் கூட ஒலிம்பிக் ஓட்டப் பந்தயத்தில் ஜெயிப்பான்.

## கேரளாவில் ‘நிபா’ வைரஸால் இருவர் உயிரிழப்பு




(டில்லி)

கேரளா-கோழிக்கோடு பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் காய்ச்சல் காரணமாக சிகிச்சை பெற்று வந்த இருவர் உயிரிழந்தனர்.

அவர்கள் இருவருக்கும் நிபா வைரஸ் அறிகுறிகள் இருந்ததாக தெரிகிறது. உயிரிழந்தவர்களின் உடலில் இருந்து திரவ மாதிரி எடுக்கப்பட்டு, ஆய்விற்காக புனே மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த நிலையில், உயிரிழந்த ஒருவரின் 9 வயது மகன் உட்பட 4 உறவினர்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். சிறுவனின் உடல்நிலை மோசமாக இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

மேலும் கோழிக்கோடு பகுதியில் நிபா வைரஸ் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. உடல்வலியுடன் காய்ச்சல், மயக்கம் உள்ளிட்டவை இருந்தால் உடனே அரச மருத்துவமனையை அணுக வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.(நி-5)



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை சந்திக்க வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் தொடருந்தில் பயணத்தை தொடங்கியுள்ள நிலையில் உக்ரைனுக்கு எதிராக ரஷ்யாவுக்கு ஆயுதங்களை வழங்கினால் அதற்கான பலனை வடகொரியா சந்திக்கும் என அண்மையில் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சுளிவியன் எச்சரித்துள்ளார்.

வடகொரியாவுக்கும் ரஷ்யா

## மணிப்பூரில் மீண்டும் வன்முறை பழங்குடியினர் மூவர் உயிரிழப்பு



(டில்லி)

மணிப்பூரில் காங்போக்பி மாவட்டத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நாகா சமூகத்தை சேர்ந்த பழங்குடியினர் 3 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த மே மாதம் முதல் மணிப்பூரில் வன்முறைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## சுவிட்சர்லாந்து பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடவுள்ள யாழ். இளைஞன்

(ஜெனிவா)

சுவிட்சர்லாந்தில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் யாழ்.இளைஞர் ஒருவர் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்து ஆர்காவ் மாநிலம் சார்பாக யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறையை பூர்வீகமாகக் கொண்ட செல்வதயாளன் ரிசோத் என்ற இளைஞரே போட்டியிடவுள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி சுவிட்சர்லாந்தில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது.



இதேவேளை, சுவிட்சர்லாந்து பாராளுமன்ற தேர்தலில் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் பிரதான கட்சிகள் சார்பாக ஈழத்தமிழர்கள் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

பொ...
விபரீ...

(டில்லி) இந்திய... ஜூன்1 ஆ... 6 ஆம் தி... மழை கு... இந்திய வ... தெரிவித்...

லிபி... இ...

(திரிபோ...) கெய்... கடல் பகு... யல்” புயல... மற்றும் ... வில் 2 ... னதாக அ... துள்ளது. “டேன... பட்ட இந்... ற்றுக்கிழ... யது. பாய்த... ஷாஹத், ... நகரங்க... பிடியில்... மாகின. ... லும் தண்... து . முக்... இருந்து ... எம், லிப... தியை வெ... வீடுக... ணீரில் ... தால், தா... மக்களை... மீட்புக்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ரஷ்யா விரையும் கிம் ஜாங் உன் அச்சத்தில் உலக நாடுகள்!



(மொஸ்கோ)

**உக்ரைன் போருக்குப் பிறகு சர்வதேச அளவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள ரஷ்யா, வடகொரியா ஆகிய நாடுகளிடையே தற்போது அதிகரித்து வரும் இராணுவ ரீதியிலான நெருக்கம் சர்வதேச அரசியலில் திருப்பு முனையை ஏற்படுத்தும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.**

வுக்கும் இடையே 1,180 கிலோ மீற்றர் தொலைவு உள்ள நிலையில் கிம் ஜாங் உன், விமானத்தில் செல்லாமல், தொடரூந்தில் பயணம் செய்வது பல்வேறு கேள்விகளையும் சந்தேகங்களையும் எழுப்பியுள்ளது.

குறித்த தொடரூந்தில், ரஷ்யாவுக்கு அளிக்கவிருக்கும் ஆயுதங்கள் ஏற்றப்பட்டுள்ளதாகவும், இது ரஷ்யா - வடகொரியா இடையே வளர்ந்து வரும் இராணுவ ஒத்துழைப்பை பிரதிபலிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைனுக்கு எதிராக ரஷ்யாவுக்கு ஆயுதங்கள் வழங்குவது தொடர்பாக இந்த சந்திப்பு நடைபெறவுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

ரஷ்யா ஆயுதப் படையை பலப்படுத்தும் வகையில், வட கொரியாவிடமிருந்து ஆயுதங்களை வாங்க திட்டமிட்டுள்ளதாக அமெரிக்கா உளவுத் துறைக்கு தகவல் கிடைத்துள்ளதாக வெள்ளை மாளிகை குறிப்பிட்டுள்ளது.

தற்போது அதனை உண்மையாக்கும் வகையில் இரு நாட்டு ஜனாதிபதிகளின் சந்திப்பு நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

வட கொரியாவுடன் அனைத்து துறைகளிலும் ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி புடின் கூறியுள்ளது சர்வதேச ரீதியில்பர பரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், ரஷ்யாவிலுள்ள வாக்னர் படைக்கு ஆயுதங்களை வழங்கியதற்காக வடகொரியாவுக்கு அமெரிக்கா கடும் கண்டனங்களைத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## பொய்த்துப் போன மழைவீழ்ச்சி விபரீத முடிவெடுக்கும் விவசாயிகள்

(டில்லி)

இந்தியாவில் இந்த ஆண்டு ஜூன் 1 ஆம் திகதி முதல் செப்டெம்பர் ஆம் திகதி வரையில் 11 சதவீதம் மழை குறைவாக பெய்துள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது கடந்த 8 ஆண்டுகளில் இல்லாத அளவு குறைவு என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக கேரளா தொடங்கி, மத்திய மற்றும் வட மாநிலங்கள் வறட்சியின் பிடியில் சிக்கியுள்ளன. குறிப்பாக மகாராஷ்டிராவின் மரத்வாடா பகுதியில் வழக்கத்தை விட 20.7% மழை குறைவாக பெய்துள்ளது. இதனால், பீட், ஒஸ்மனாபாத், நண்டேட், அவுரங்கபாத், பர்பானி, லத்தூர், ஜல்னா மற்றும் ஹங் கோலி உள்ளிட்ட 8 மத்திய மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு, விவசாய பயிர்கள் முற்றிலும் கருகின. இதனால், விவசாயிகள் கடுமையான துயரத்திற்கு ஆளாகியுள்ளனர். இந்நிலையில், வருமானம் குறைந்து கடன் களை அடைக்க முடியாத நிலை யில், கடந்த ஜனவரி முதல் ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரையி லான கால கட்டத்தில் அம்மா நிலத்தில் 685 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அதிலும் ஜூன் 1 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலான பருவ மழை காலகட்டத்தில் மட்டும் 294 பேர் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர்.

மகாராஷ்ரா விவசாயத்துறை அமைச்சர் தனஞ்செய் முண்டே வெளியிட்டுள்ள அறிக்கையில், பீட் மாவட்டத்தில் அதிகபட்சமாக 186 விவசாயிகளும், ஒஸ்மனபாத்தில் 113 விவசாயிகளும், நண்டட் மாவட்டத்தில் 110 விவசாயிகளும் உயிரிழந்துள்ளனர். இந்த அறிக்கை நாடு முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. (நி-5)

## லிபியாவை தாக்கிய 'டேனியல்' புயல் இதுவரை 2,000 பேர் உயிரிழப்பு

(திரிபோலி)

கெய்ரோ, மத்திய தரைக் கடல் பகுதியில் வீசிய, "டேனியல்" புயலால் ஏற்பட்ட கன மழை மற்றும் வெள்ளத்தால் லிபியாவில் 2 ஆயிரம் பேர் பலியானதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

"டேனியல்" என பெயரிடப்பட்ட இந்த புயல் கடந்த ஞாயிறுக்கிழமை லிபியாவை தாக்கியது.

பாய்தா, சூசா, டெர்னார், ஷாஹத், மார்ஜர்ஜ் உள்ளிட்ட நகரங்கள் புயலின் கோரப் பிடியில் சிக்கி சின்னாபின்னமாகின. அனைத்து இடங்களிலும் தண்ணீர் புகுந்ததை அடுத்து, முக்கிய நீர்நிலைகளில் இருந்து வெளியேறிய வெள்ளம், லிபியாவின் கிழக்கு பகுதியை வெள்ளக்காடாக்கியது.

வீடுகள், வாகனங்கள் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டதால், தங்க வழியின்றி தவித்த மக்களை அந்நாட்டுப் பேரிடர் மீட்புக் குழுவினர் மீட்டு



வருகின்றனர்.

இந்த கோரப் புயல், டெர்னா நகரை புரட்டிப் போட்ட தை அடுத்து, அங்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

வெள்ளத்தில் சிக்கிய அந்த நகரின் பெரும்பாலான பகுதிகள் அழிந்தன.

கொடூர தாக்குதலுக்கு உள்ளான டெர்னா நகர் பேரழிவு பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாட்களாக பெய்த மழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி இதுவரை, 2,000 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு பிரதமர் ஒசாமா ஹமத் தெரிவித்துள்ளார்.

ஆயிரக்கணக்கானோர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதால், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது.

வெள்ளத்தில் சிக்கி மாயமானவர்களை தேடும் பணி முழுவீச்சில் நடந்து வருகிறது. (நி-5)

## மொரோக்கோ நிலநடுக்கம் உயிரிழப்பு 3000 ஆக உயர்வு

(ரபாத்)

மொரோக்கோவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 3 ஆயிரமாக உயர்வடைந்துள்ளது என அந்நாட்டு உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

வட ஆபிரிக்க நாடான மொரோக்கோவில் கடந்த 8 ஆம் திகதி நள்ளிரவு ஏற்பட்ட நிலநடுக்கம் அந்நாட்டையே உலுக்கியுள்ளது.

குறித்த சம்பவத்தில் பல உயிரிழப்புகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து அங்கு மீட்புப் பணிகள் நடந்து வந்த நிலையில் பலியானோர் எண்ணிக்கை கடந்த 10 ஆம் திகதி 2 ஆயிரத்தை தாண்டியுள்ளது என மொரோக்கோ உள்துறை அமைச்சு தெரிவித்திருந்தது.

இந்நிலையில், நிலநடுக்கத்தால் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 3 ஆயிரத்தைத் தாண்டியுள்ளதாக மொரோக்கோ உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில், 2 ஆயிரத்து 500 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோயின் புரிதலும் புரியாத புதிர்களும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்

**வாருங்கள் எம்மி னிய உறவுகளே!**

(சென்றவார தொடர்ச்சி..)

வாயிலிருந்து குதம் வரை சமிபாட்டுத் தொகு தியில் எந்த இடத்திலும் புற்றுநோய் ஏற்படுவது போல நுரையீரல் இன் னும் உமிழ்நீர் சுரப்பியி லும் இது ஏற்படுகின்றது. ஆனால் சரியான முறை யில் புற்றுநோயின் குண ங்குறிகளை ஆரம்பத்தில் இனங்காணத் தவறின் அது கறையான் புற்று போல வளர்ந்து விட் டால் பிரச்சினை பெரிதாகி விடும்.

கருவறையை சத்திர சிகிச்சை மூலம் அக ற்றிவிட்டால் இதற்கான வாய்ப்புக்கள் குறை வென்றாலும் ஏதும் உட லில் வித்தியாச மாக உணர்ந்தால் வைத் தி யர்களின் பரிந்துரை களை உடனடி யாகவே செவிமடுத்தல் அவசி யம்.

மருத்துவ தவறுக ளால் முழுமையாக வெட் டியெ டுக்கப்பட்ட கருவ றையை 100 சதவீதம் போர்மலின் கரைசலுக்குள் அமிழ்த் தாத நிலையில் புற்று நோய் இருந்த பகுதி மேலி ருந்ததால் அதனது இரு க்கை சோதனையில் வெளிக் கொணரப் பட வில்லை.

இதனால் புற்று நோய் தன் கணக்கில் பல் கிப் பெருகியும் அதனது இரு ப்பை சோதனைகள் பல வும் மறைத்து விட்டன. அதனது உருவாக்கம் பற்றிய ஊகங்களுக்கும் இடமளிக்கவில்லை.


பல்கிப் பெருகி ஊளைச் சதையாக வளர்ந்து விட்ட புற்று நோய்க்கலங்களை பின்னர் அழிப்பதென்பது இயலாததாகவே கருதப் படுகின்றது.

கற்றவர் மட்டத்தில் இந்த அறிவு புரிந்துண ர்வு இல்லாதிருந்த கார ணத்தால் அதில் உழ ன்று கொண் டிருக்கும் அனுபவத்தினை இங்கே பதிவு செய்தேன். இவ் வகையில் புற்று நோய் பற்றிய அறிவினை அனை த்து மக்களுக்கும் குறிப்பாக பெண்பிள்ளை களுக்கும் அறிவுறுத்துவது அவசிய மாகும். இதில் ஊடகங்க ளின் பங்கும் அளப்பரி யது.

விவசாய உயிரியல் துறையில் நேர்மையான கண்ணியமான தற்துணி வான பெண் தொழில்நுட்ப வியலாளருக்கு உருவாகி யது கருவறை புற்றுநோய்.

தனது தாய்க்கு வந்தது தனக்கும் வந்ததை

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



நினைத்து தினந் தினம் துடிதுடித்த அந்த உடன் பிறப்பு தன்னை காப்பா ற்றிக் கொள்ள அனைத்து சிகிச் சைகளையும் ஓடி யோடிச் செய்தும் இறுதியில் 38 வயதில் அந்த இரு குழந்தைகளின் தாய் உயிர் பிரிந்து விட்டது.

தினந்தினம் தனக்கான நோயின் வலியை கூறி ஆத ங்கப்பட்ட ஆன்மா அவதிப் பட்டே உயிரை நீத்தது.

எவரையும் எதிலும் நோக டிக்காத அன்புடன் தன் ஆளுமையை வெளிக்காட் டிய உன்னத ஆன்மா அவ திப்பட்ட தருணங்கள் இன் னும் மறக்க முடியாதவை.

உலகில் நல்லவருக்கு, நல்லதையே எண்ணுபவ ருக்கு, நல்லுள்ளங் கொண் டவருக்கு எப்படி புற்றுநோய் வருகின்றது? இதுவும் இன் னும் புரியாத நான்காவது புதிர்.

ஆண்களின் இனப் பெருக்க தொகுதியில் விந் துகளுக்கான ஊட்டச் சத்தை வழங்குவதற்காக வும் விந்தின் அசை வுக்கு ஏதுவான சுரப்பை சுரக்கி ன்ற புரொஸ் ரேற்று என் னும் சுரப்பியில் உருவாகும் புற்றுநோயாகும்.

இது தவிர பல்வேறு புற்று நோய்களை சுகாதார திணைக்களம் வரிசை ப்படுத்தியிருக்கின் றது. எம் மண் ணிலேயே ஆரம்ப நிலையில் தகுந்த சிகிச்சை பெற்று பலர் ஆரோக்கிய மாக இருக்கின் றார்கள். இதற்காக தமது வாழ்க் கையை அர்ப்பணி த்திரு க்கும் வைத்தியர்கள், தாதி மார் கடவுளின் பிள்ளை களே.

அநேகமான புற்று நோய் க்கு அறுவைச் சிகிச் சையும் கதிரியக்க சிகிச்சை (Radio therapy) மூல மாகவும் தனித்துவமான வேதியியல் மருந்துகளை குருதியோ ட்டத்தில் ஊசியால் உட் செலுத்தியும் (Chemoth erapy) சிகிச்சையளிக் கின்றனர்.

அறுவைச் சிகிச்சை (Surgery) மூலம் புற்று நோய்க் கட்டிகள் (கலங் கள்) அகற்றப்பட்டால் அத னது பெருக்கம் மட்டுப் படுத்தப்பட்டுவிடும்.

ஆனால் அறுவைச் சிகிச்சை செய்ய முடியாதி ருப்பின் மேற்கூறிய கதிரிய க்கு மற்றும் வேதியியல் சிகிச்சைகளுக்கு கட்டுப் படத் தவறின் விளைவு விபரீ தமானது தான்.

இவற்றைவிட PET-CT Scan மற்றும் CT Scan படங்களின் உதவியுடன் நேரடியாக புற்றுநோய்க் கல ங்களை கதிரியக்க சிகிச்சை (Image Guided Radio therapy – IGRT) மூலம் சக்தியற்றதாக்கும் வழி முறையும் உடலில் எதிர்ப்பு சக்தியை தூண்டி புற்று நோய் கலங்களை கட்டுப்ப டுத்தும் (Immun other apy) சிகிச்சை முறைக ளும் புற்று நோயை குண ப்படுத்த பயன் படுத்தப்படுகி ன்றன.

இதில் புற்றுநோய் கலங் களை முழுமையாக அகற் றுவதென்பது இய லாத தென்பதால் அவ ற்றின் பெருக்கத்தை தடுத்து அல் லது குறைத்து அல்லது செயலிழக்க செய்து நோயே ற்பட்டவரின் வாழ்நாளை அதிகரிக்க வாய்ப்புக்கள் உண்டு. ஆனால், அவற்று க்கான செலவு அதிகமா னது.

இங்கிலாந்தில் ஜெனென் டெக்டோச் நிறு வனம் அடி ஸோலிசூமாப் (Atizozum ab) என்னும் ஊசி மருந்தை புற்று நோயை குணப்படுத்த கண்டு பிடித் திருப்பதாக செய்தி யொன்று ஊடகங்களில் வெளிவந்தி ருக்கின்றது.

2024 இல் புற்றுநோய் க்கான மருந்து உலகில் கண்டறியப்படும் என தீர்க்க தரிசி பாபாவங்கா எதிர்வு கூறியிருப்பதும் நினை வில் நிற்கின்றது. பாரம் பரிய வைத்தியத்தில் சொர்க்கமரம் (Sim aroubagl oaca) என அழைக்க ப்படும் மரத் தின் இலை கள் பவுடரா க்கப்பட்டு புற்றுநோய் சிகிக்சைக்காக பயன் படுத்தப்படுகின்றது.

வேதியியல் சிகிச்சைக் காக பயன்படும் அநேக மான மருந்துகள் தாவர ங்களிலிருந்து பிரித் தெடுக்கப்பட்டவை என்ப தும் இதில் கவனிக்கத் தக்கது.

இதில் இன்னொரு அம்சமாக பாரம்பரிய மரு த்து வத்தையும் மேலைத் தேய மருத்துவத்தையும் இணைத்த சிகிச்சை முறை இவ்வாறான நோய் களுக்கு இல்லாதிருப்பது எதிரும் புதிருமாக இருக் கின்றது.

கொள் கைக ளும ் முறைகளும் வேறு வேறு என்றா லும் புற்றுநோயை குணப் படுத்த அறிவியல் ரீதியான இந்த இணைப்பு உதவுமா என்பதே இங்கு ள்ள கேள்வி. பாரம்பரிய மருத்துவத்தில் பயன்ப டும் தாவரங்களி லிருந்து பிரித் தெடுக் கப் பட்ட இரசாயனங்களை அடிப்ப டையாக வைத்து தயாரிக் கப்பட்ட மருந்துகளை மேலைத் தேய மருத்து வம் பயன் படுத்துகின்றது.

அவ்வாறாயின் புற்று நோயைகுணமாக்கஅனை த்து மருத்துவ முறை களும் இணைந்ததொரு முறை பரிந்துரைக்கப் படாதது ஏன் என்பதும் இன்னொரு புதிராகவே உள்ளது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குத்தொடுவாய்

# மனித புதைகுழி அகழ்வு விவகாரம்

# ஐ.நா கூர்ந்து கவனிக்க வேண்டும்

### காணாமலாக்கப்பட்டோர் சங்கம் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

**ஐக்கிய நாடுகள் சபை ஆரம்ப காலத்தில் எம் பிரச்சினைகளை முன்னோக்கி எடுத்திருந்தாலும் இம்முறை கொக்குத்தொடுவாய் பெரிய சான்றாக இருக்கின்றது.**

இந்தநிலையில் ஐ.நா கூட்டத் தொடரில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விடயத்தை கூர்ந்து கவனிக்க வேண்டும் என வடக்கு- கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் உபசெயலாளர் சபிதா தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு நடைபெறும் இடத்தினை பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தத்திற்கு பின்னர் உயிரிழந்த பெண் போராளிகள், எங்கள் பிள்ளைகளின் உடல்கள் போல் தெரிகின்றது. இதனை இங்கு கிடைக்கப் பெற்ற ஆடைகள், உள்ளாடைகளினை வைத்து உறுதிப்படுத்த முடிகின்றது.

எம்பிள்ளைகள் மிலேச்சதனமாக கொன்று குவிக்கப்பட்டு புதைக்கப்பட்டிருக்கின்றார்கள். இது ஒரு புதைகுழி அல்ல வடகிழக்கு பகுதிகளில் இன்னும் பல இருக்கலாம். கடந்த காலத்தில் கிருஷாந்தி போன்ற பெண் பிள்ளைகளின் மரணத்தினை சாதாரணமாக எடுத்தது போன்று இருந்தாலும் இவை தமிழ் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகவே பார்க்கின்றோம். எனவே ஐக்கிய நாடுகள் சபை எமக்கு நல்லதொரு தீர்வினை பெற்றுத்தர வேண்டும் என மேலும் தெரிவித்தார். (நி-4-299)

# வினோ எம்.பிக்கு மன்றால் அழைப்பாணை

(மன்னார்)

முல்லைத்தீவு நீதிமன்றில் நாளை வியாழக்கிழமை ஆஜராகுமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கத்திற்கு முல்லைத்தீவு பொலிஸார் ஊடாக நீதிமன்ற அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு குருந்தூர்மலையில் நீதிமன்ற கட்டளையையும் மீறி பௌத்த விகாரை நிர்மாணிக்கப்பட்டிருந்த நிலையில் பூசை வழிபாடுகளுக்காக சென்ற பௌத்த குருமாரின் வழிபாட்டுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் அவமானப்படுத்திய குற்றச்சாட்டுக்களை முன்வைத்து சில பிக்குகள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தனர்.

அந்த முறைப்பாட்டுக்கமைவாக முல்லைத்தீவு பொலிஸார் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

அந்த வழக்கில் பாராளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம், செல்வராசா. கஜேந்திரன் உட்பட பலரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு வழக்கு தொடர்ச்சியாக நடைபெற்று வரும் நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கத்துக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி-4-299)

# நெல்லியடிப் பகுதியில் தீப்பற்றிய மரக்காலை



(கரணவாய்)

நெல்லியடி நகருக்கு அண்மித்த பகுதியில் நேற்று அதிகாலை மரக்காலை ஒன்று தீப்பற்றி எரிந்துள்ளது.

தீயை அணைப்பதற்காக யாழ்ப்பாண தீயணைப்புப் பிரிவு சம்பவ இடத்துக்குச் சென்று தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டது. எனினும் 30 லட்சம் ரூபாய் பெறுமதியான பலகைகள் தீப்பற்றி எரிந்துள்ளதாக மரக்காலை உரிமையாளர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். (நி-4-60)

# கோணாவில் மகா வித்தியாலயத்திலுள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புங்கள்

### மாணவர்களின் பெற்றோர் போராட்டம்

(கண்டாவளை)

கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலயத்தில் காணப்படுகின்ற ஆசிரிய வெற்றிடங்களை உடன் நிவர்த்தி செய்யக்கோரி மாணவர்களின் பெற்றோர்களால் நேற்றுக் காலை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.



கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்திற்கு உட்பட்ட முதல் நிலைப் பாடசாலைகளில் ஒன்றான கோணாவில் மகா வித்தியாலயத்திற்கு போதிய ஆசிரிய வளங்கள் நிவர்த்தி செய்யப்படாமையினால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இதனால் குறித்த ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புமாறு கோரி பெற்றோர்களால் தொடர்ச்சியாக மாகாண கல்வி திணைக்களம், வலய கல்வித் திணைக்களம் ஆகியவற்றிற்கும் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அத்துடன் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகம் தரவில்லை என்றும் இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தே பெற்றோர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சுமார் 450 வரையான மாணவர்கள் கல்வி கற்று வரும் பாடசாலையில் 32 ஆசிரியர்கள் தேவையான போதும் 22 ஆசிரியர்கள் மாத்திரமே கடமையாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் இப்பாடசாலையில் இருந்து அண்மையில் 8 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்று வெளியிடங்களுக்கு சென்றுள்ளனர். கடந்த இரண்டு, மூன்று மாதங்களுக்கு மேலாக ஆசிரியர்கள் இல்லாத நிலையில் குறித்த பாடசாலை இயங்கி வருவதாகவும் இதனால் தங்களுடைய பிள்ளைகளின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் பெற்றோர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

அதனையடுத்து சம்பவ இடத்திற்கு கிளிநொச்சி தெற்கு வலய கல்வி பணிமனையின் (கல்வி அபிவிருத்தி பிரிவு) பிரதிக் கல்விப் பணிப்பாளர் பரஞ்ஜோதி பரணீதரன் சென்று நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த போதும் பெற்றோர்களின் எதிர்ப்பு கடுமையாக காணப்பட்டது.

அதன்பின்னர் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் பாடசாலையில் கடமைகளை பொறுப்பேற்கும் வரை வலயக் கல்வித் திணைக்களத்தின் அதிகாரிகள் குறித்த பாடங்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பார்கள் என்று எழுத்துமூல வாக்குறுதி வழங்கப்பட்டதையடுத்து போராட்டம் நிறைவுக்கு வந்தது. (நி-4-315)

# படகுகளை இழுத்துச் செல்லும் ஓடை நீண்டகாலமாக விரிவுபடுத்தப்படவில்லை

### முறையிட்டும் நடவடிக்கையில்லை என பள்ளிமுனை மீனவர்கள் கவலை

(மன்னார்)

மன்னார் பள்ளிமுனை கடற்கரையில் இருந்து கடலுக்குள் படகுகளை இழுத்துச் செல்லும் ஓடையில் தற்போது நீர் வற்றிய நிலையில் காணப்படுகிறது. இதனால் தமது படகுகளை கடலுக்குள் இழுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என பள்ளிமுனை மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த ஓடை தோண்டப்பட்டு விரிவுபடுத்தப்பட்டால் மாத்திரமே மீனவர்கள் எவ்வித தடங்கலும் இன்றி தமது படகுகளையும் ஏணைய மீன்பிடி உபகரணங்களையும் கொண்டு செல்ல முடியும்.

பள்ளிமுனை கிராமத்தில் சுமார் ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட மீனவ குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். கடல் தொழிலை நம்பி வாழ்ந்து வரும் அவர்கள் ஒவ்வொரு வருடமும் குறித்த பிரச்சினைக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

படகுகளை இழுத்துச் செல்லும் ஓடை தோண்டப்பட்டு விரிவுபடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கூறி கடந்த காலங்களில் ஜனாதிபதி, கடற்றொழில் அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு சென்றும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

காலையில் இருந்து சுமார் 6 மணித்தியாலங்களின் பின்னர் குறித்த ஓடைக்கு நீர் வரும்.

அதுவரை காத்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தற்போதைய கடல் தொழில் அமைச்சரின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

தற்போது குறித்த ஓடையில் நீர் வற்றிய நிலையில் காணப்படுவதனால் படகுகளை கடலுக்குள் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் நீண்ட நாட்களாக மீனவர்கள் தொழிலுக்கு செல்ல முடியாத நிலையில் உள்ளனர்.

இதனால் பள்ளிமுனையில் உள்ள மீனவ குடும்பங்கள் தற்போது பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர். (நி-4-285)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 281





"உன்னைப் பார்த்தால் தெரியவில்லையா? நீ தப்பி ஓடி ஒளிந்து கொள்ள வந்திருக்கிறவன் என்று நேற்றைக்கே ஊகித்தேன். இன்றைக்குக் காலையில் உன் சிநேகிதன், வைத்தியர் மகன் மூலமாக அது ஊர்ஜிதமாயிற்று."

"அவன் என்ன உளறினான்?"

"காலையில் எழுந்ததும் காட்டிலே மூலிகை தேட வேண்டும் என்றான். நான் அழைத்துப் போவதாகச் சொல்லி இங்கே அழைத்துக் கொண்டு வந்தேன். என்னிடத்தில் காதல் புரிய ஆரம்பித்தான். 'உன்னுடைய சிநேகிதன் உன்னை முந்திக் கொண்டு விட்டானே?' என்று சொன்னேன்"

"என்ன சொன்னாய்?"

"கொஞ்சம் பொறு கேட்டுக் கொண்டு வா! நீ என்னிடம் காதல் புரியத் தொடங்கி விட்டதாகச் சொன்னேன். அப்போது தான் உன் பேரில் அவனுடைய சந்தேகத்தை வெளியிட்டான். ஏதோ இராஜ தண்டனைக்குப் பயந்து நீ ஓடித் தப்பி வந்திருக்கிறாய் என்று அவனுக்கு வழியில் பல காரணங்களால் சந்தேகம் தோன்றியதாம்! 'அப்படிப்பட்டவனை நம்பி அநியாயமாய்க் கெட்டுப் போகாதே! என்னைக் கலியாணம் செய்து கொள்!' என்றான். 'ரொம்ப அவசரப்படுகிறாயே? பெரியவர்களைக் கேட்க வேண்டாமா?' என்றேன். 'பழந்தமிழ் மரபையொட்டிக் களவு மணம் புரிந்து கொள்வோம்!' என்று உன் அழகான சிநேகிதன் சொன்னான். எப்படியிருக்கிறது கதை?"

"அட சண்டாளப் பாவி!" என்று கத்தினான் வந்தியத்தேவன்.

"இதற்குள்ளே குதிரைகள் வரும் சத்தம் கேட்டது. நான் மரத்தின் மேல் ஏறிப் பார்க்கச் சொன்னேன். மரத்தின் மேலே நின்று பார்த்தபோது அவனுடைய கால்கள் வெட வெட வென்று நடுங்கியதை நினைத்தால் இப்போதும் எனக்குச் சிரிப்பு வருகிறது" என்று சொல்லி விட்டுப் பூங்குழலி சிரித்தாள்.

"விளையாட்டு இருக்கட்டும் அப்புறம் என்ன நடந்தது?"

"அவன் மரத்தின் மேலேயிருந்து இறங்கி வந்தான். 'பார்த்தாயா? நான் சொன்னது சரியாகப் போயிற்று. அவனைப் பிடிப்பதற்காக இராஜ சேவகர்கள் வந்திருக்கிறார்கள்!'என்றான். 'அப்படியானால் அவனுடன் வந்த உன்னையும் பிடிப்பார்கள் அல்லவா? நீ ஓடி எங்கேயாவது ஒளிந்து கொள்!' என்றேன். 'அப்படித்தான் செய்ய வேண்டும்' என்றான். என்னை விட்டுப் பிரிந்து சென்றான். நான் எதிர்பார்த்தபடியே நடந்தது."

"என்ன? என்ன நடந்தது?"

"ஓடி ஒளிந்து கொள்வதாக என்னிடம் சொல்லி விட்டு நேரே அந்தக் குதிரைக்காரர்கள் இருந்த திசையை நோக்கிப் போய் அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டான்."

"ஐயோ! பாவம்!"

"அதிகமாகப் பரிதாபப்பட்டு விடாதே! கொஞ்சம் மிச்சம் வைத்துக்கொள்!"

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"குறையும் கேள்! நீயே தெரிந்துகொள்வாய்! அவர்களிடம் நேரே போனான். அவர்கள் இவனை அதிசயத்துடன் பார்த்தார்கள். உற்று உற்றுப் பார்த்து ஒருவரோடொருவர் இரகசியமாகப் பேசிக் கொண்டார்கள்; 'நீங்கள் யார்?' என்று இவன் கேட்டான். (தொடரும்)

---

*ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ*

# மரண அறிவித்தல்

## அமரர். செல்லையா இராசரட்ணம்

(SRPமோட்டர்ஸ் உரிமையாளர்)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1944.08.22 | 2023.09.10 |

காளி கோவிலடி தாவடி வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர்.செல்லையா இராசரட்ணம் அவர்கள் 10.09.2023 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா, பொன்னம்மா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகர், பூரணம் (நவாலி) அவர்களின் அன்பு மருமகனும், இராசமணி (வவா) அவர்களின் அன்புக் கணவரும், பிரியதர்சினி, காலஞ்சென்ற பிரசன்னவதனன் மற்றும் பிரசாத், பிறேம்நாத் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகநீதன், நிரோஜா, வரலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும், வைஷிகா, அனிசிகா, சேனுஷாத், பிரதிஸ்ஜா ஆகியோரின் அன்புப் பேரனும் கமலாம்பிகை, ஞானாம்பிகை, காலஞ்சென்ற யோகராசா மற்றும் பாக்கியலட்சுமி, பத்மசோதி, ஜெகசோதி, பவானி, தேவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.09.2023 இன்று புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் மதியம் 12 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(17060)

தாவடி வடக்கு,
காளி கோவிலடி,
கொக்குவில்.

077 538 0061

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலுண்டு வினை இல்லை ! மயிலுண்டு பயமில்லை! குகனுண்டு குறைவே இல்லை !

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## வினையறுத்து ஞானத்தை தரவல்ல நல்லூர் தேரடியும் திருவீதியும்

நல்லூர்க் கந்தசுவாமியார் இருக்கையிலே நமக்கென்ன அச்சம் என்று கேட்பார் தவத்திரு யோகர் சுவாமிகள்.

பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி கிளியே ஆறுமுகன் தஞ்சமடி.

என்ற எங்கள் ஞானகுரு தவத்திரு யோகர் சுவாமிகளின் அருள் வாக்கு முற்றிலும் உண்மையானது.

ஆம், நல்லூர்க் கந்தன் எங்கள் முந்தை வினையறுப்பவன். அவனின் தேரடி ஞானத்தின் இருப்பிடம்.

தேரடியில் ஞானம் பெற்றவர்கள் நம் ஈழத்துச் சித்தர்கள். கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள், குழந்தைவேற் சுவாமிகள் என ஈழத்துச் சித்தர் பரம்பரை ஞானம்பெற்ற இடம் நல்லூர் முருகனின் தேரடி என்பதை நம் ஈழத்திருநாட்டு மக்கள் அனைவரும் அறிந்திருக்க வேண்டும்.

அதனாலன்றோ நல்லூர் முருகனிடம் செல்பவர்கள் தேரடியைத் தரிசிக்கத் தவறுவதில்லை.

நல்லூர்க் கந்தனின் தேரடியில் சில நிமிடங்கள் குந்தியிருந்து முருகா என்று அவனை உள்ளத்தால் நினைக்கின் நல்லூர்க் கந்தன் நம் முன்வந்து நிற்பான்.

வைதாரையும் வாழ வைக்கின்ற கருணைக் கடலாகிய நல்லூர்க் கந்தப் பெருமான் சண்முகராய் தேரேறுகின்ற காட்சியை காணுகின்ற அடியவர்கள் முன்னைத் தவம் செய்தவர்கள் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

உண்மை. நல்லூர் சண்முகப்பெருமான் தேரேறி வருகின்ற பெரும் காட்சியைக் காணுகின்ற அடியவர்கள் அகத்தால் அடைகின்ற ஆனந்தத்துக்கு எல்லை ஏதுமில்லை.

அதனாலன்றோ நல்லூரில் வீற்றிருக்கும் சண்முகப்பெருமான் தேரேற வருகின்ற காட்சியை காண்பதற்கு அடியவர்கள் அலை மோதுவர்.

சண்முகா! ஒருக்காலேனும் நீ தேரேற வரும்போது ஆடி அசைவதைக் கண்ணுற்றால், இந்த மானிடப் பிறப்பின் பயனைப் பெற்றதாய் அமையும்.

ஆம், நீ அங்கும் இங்குமாய் அசையும் போது உன் வேகத்தில் அடியவர்கள் அசைகின்ற அந்தக் காட்சி இருக்கிறதே அதனை எப்படி வர்ணிப்பது.

உன்னாலன்றோ நாங்கள் வாழ்கின்றோம். உன்னாலன்றோ எங்கள் இனம் உலகம் எல்லாம் வாழுகிறது. எத்தேசத்தில் இருந்தாலும் எத்தனை வசதி வாய்ப்புகளுடன் இருந்தாலும் நல்லூர் முருகன் என்றதும் அவர்கள் உன்னை நாடித் தேடி ஓடி வருகின்றனர் என்றால் அதுதான் உன் ஈர்ப்பு. உன் ஆட்கொளல்

நல்லூர் சண்முகா! நீ தேரேறி வருகின்ற திருவீதி நடந்தால், உன் திருவீதி மண்ணில் கிடந்து உருண்டால், அதுவன்றோ முத்தி.

ஆம், நல்லூர் முருகனின் திருவீதி நடந்தால் முத்தி என்ற உண்மைப் பொருளை உணர்ந்து அவன் திருவருளைப் பெற்று இப்பிறப்பின் பயனை அனுபவிப்போமாக.

# ஈஸ்டர் தின தாக்குதல்

## சர்வதேச விசாரணையே தேவை

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி கடந்த வாரம் வெளியிட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பிலான காணொலி தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்துமாறு ஐ.நாவிடம் நேரில் கோரிக்கை விடுக்கவுள்ளேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "

சனல் 4 தொடர்பில் விசாரணை அவசியம் என ஐ.நாவும் வலியுறுத்தியுள்ளது. இன்னும் ஓரிரு நாட்களில் ஐ.நாவின் இலங்கை பிரதிநிதியை சந்தித்து, சர்வதேச விசாரணை நடத்துமாறு கோரிக்கை விடுக்கவுள்ளேன்.

நான்கு வருடங்களாக என்னை இலக்கு வைத்துத்தான் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் நடந்தது என்ன என்பது சனல் 4 காணொலி ஊடாக தெளிவாகின்றது எனவும் தெரிவித்தார். (ம-7)

# தொழில் பயிற்சிக் கல்வி

## நாட்டின் தற்போதைய தேவை

### அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ

(கொழும்பு)

தொழிற்பயிற்சிக் கல்வி நாட்டின் தற்போதைய தேவை எனவும் பல்கலைகழகங்களுக்கு வழங்கப்படும் அங்கீகாரம் அந்த நிறுவனங்களுக்கும்வழங்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

ஜனாதிபதிஊடகமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் வைத்தே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ் கல்வி நிறுவனங்கள் உள்ளன. தொழிற்கல்வி நிறுவனங்களுக்கு பல்கலைக் கழகங்களுக்கு இருக்கும் அங்கீகாரம் இல்லை. தற்காலத்தில் தொழில் பயிற்சிக் கல்வி நாட்டின் தேவையாக இருப்பதனால், அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.

தொழிற்கல்வி நிறுவனங்களுக்கு பல்கலைக் கழகங்களுக்கு இருக்கும் அங்கீகாரம் இல்லாததால் நாட்டின் இளைஞர் சமூகம் தொழிற்கல்வியில் கவனம் செலுத்துவதை தவிர்த்து வருகின்றது.

ஏனைய நாடுகளில், அவர்களுக்கு தமது தொழில் பயிற்சி தொடர்பான பட்டத்தை வழங்குகிறார்கள். இங்கு அவ்வாறு தொழில் பயிற்சிக்காக குறித்த நிறுவனங்களால் பட்டம் வழங்கப்படுவதில்லை, அதனால்தான் இந்த நாட்டின் கல்வி முறையில் முழுமையான மாற்றம் இடம் பெறவேண்டும்என்று நாங்கள் பரிந்துரைத்துள்ளோம்.

நமது நாட்டில் உயர் கல்வி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கத் தவறுவதனாலேயே சில மாணவர்கள் வெளிநாடு செல்கின்றனர். மேலும், மாணவர்களின் காலத்தை வீணடிப்பது கடுமையான குற்றமாகும். பரீட்சை முடிந்து பெறுபேறுகள் வெளியிடப்படும்வரை பல மாதங்களாக அவர்கள் வீட்டிலேயே தங்கியிருக்கின்றனர்.

மாணவர்களின் காலத்தை வீணடிக்கும் கல்வி முறை மாற்றப்பட வேண்டும். இவ்வாறான நிலையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபைக்குப் பதிலாக சுயாதீனமாக செயற்படக்கூடிய உயர்கல்வி ஆணைக்குழு ஒன்றை நாம் முன்மொழிந்துள்ளோம்" என்றார். (ம-7)

## தொடருந்திலிருந்து தவறி விழுந்தவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பில் பம்பலப்பிட்டி மற்றும் வெள்ளவத்தை இடையில் பயணித்துக் கொண்டிருந்த தொடருந்தில் இருந்து தவறி விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தானது நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த நபர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபருக்கு சுமார் 45 வயது இருக்கும் என ஊகிக்க முடிகின்றதாகவும் அவரின் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பம்பலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

(திருகோணமலை)

திருகோணமலை - சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கங்கை காட்டுப் பகுதியில் வைத்து யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் நேற்று மாலை குறிகாட்டுப்பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் சேருநுவர -நீலாப்பொல பிரதேசத்தைச் சேர்ந்த வேலன் சமில் அப்சரா சில்வா (வயது 47) என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் கங்கைப் பகுதிக்கு மணல் ஏற்றுவதற்காக நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை சென்றுள்ளார்.

இரவாகியும் அவர் வீடு வராததையடுத்து உறவினர்கள், கிராமத்தவர்கள் காட்டுப்பகுதியில் தேடுதல் மேற்கொண்டபோது குறித்த நபரின் சடலம் நேற்று செவ்வாய்க்கிழமை பகல் கண்டெடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** சீனோர்-படகுதுறை (காரைநகர்), கடற்படைதளம்-காரைநகர், காரைநகர் கடற்படைமுகாம், இ.போ.ச டிப்போ-காரைநகர், களபூமி, பாலக்காடு அம்மன் கோவிலடி- காரைநகர், தோப்புக்காடு-காரைநகர், ஊரி-காரைநகர் ஆகிய இடங்களிலும் **வவுனிய பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம், மலையாபருத்திக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

முல்லை மனிதப் புதைகுழி

## அரசு உரிய முறையில் கையாள வேண்டும் - கனடா

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனித புதைகுழி தொடர்பான விடயத்தை அரசாங்கம் உரிய முறையில்கையாள வேண்டும் என கனடா வலியுறுத்தியுள்ளது.

புதைகுழி தொடர்பான விசாரணைகள் நம்பத்தகுந்த வகையில் அமைய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் சமாதானம் மற்றும் சுதந்திரத்தை பேணுவது குறித்து தொடர்ந்தும் கவனம் செலுத்துவதாக ஐ.நாவுக்கான கனேடிய பிரதிநிதி குறிப்பிட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரச வைத்தியர்கள் கவனயீர்ப்பு போராட்டம்





(நெளுக்குளம்)

வைத்தியர்கள் நாட்டை விட்டுச் செல்கின்றமையினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் தீர்வொன்றைப் பெற்றுத் தருமாறு கோரி முல்லைத்தீவு, கிளிநொச்சி வைத்தியசாலை வைத்தியர்களால் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் பணியாற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினை சேர்ந்த மருத்துவர்கள் வைத்தியசாலையின் சிகிச்சை நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மருத்துவமனை முன்பாக நேற்று நண்பகல் 12.30 மணி தொடக்கம் 2.00 மணி வரை இந்த கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்தனர். அதற்கு முன்னர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக வந்த நோயாளர்களுக்கு துண்டுப் பிரசுரங்களை வழங்கி போராட்டத்தின் கோரிக்கையினை தெளிவுபடுத்தியிருந்தனர்.

போராட்டத்தின் போது வைத்தியர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த ஆண்டு மட்டும் 700 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். தற்போது பல அரச வைத்தியசாலைகளில் பல்வேறு மருந்துகளுக்கு தட்டுப்பாடான நிலை காணப்படுவதுடன் தரம் குறைந்த மருந்துகள் அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்படுவதன் காரணமாக நோயாளிகள் உள்ளிட்ட சிலரின் அநாவசிய உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

வைத்தியர்களின் வசதிகள் செய்து கொடுக்கப்படாமை அதிகரித்த பணவீக்கம்,பல்வேறு காரணங்களால். வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றார்கள் இதன் காரணமாக சுற்றயல் வைத்தியசாலைகள் வெகுவிரைவில் இழுத்து மூடும் ஆபத்து உள்ளது. ஏற்கனவே பல வைத்தியசாலைகளில் ஆளணி குறைந்த நிலையில் வைத்தியர்கள் கடமையாற்றி வருகின்றார்கள். இவ்வாறான பிரச்சினைகளால் இலவச சுகாதார சேவையானது கடுமையான பாதிப்பினை சந்தித்து வருகின்றது என பல கோரிக்கைகளை முன்வைத்து அரச வைத்தியர்களால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது

அத்துடன் வைத்தியர்கள் வெளிநாடு செல்வதை நிறுத்தி வைத்தியர்களுக்கு ஏற்ற வசதியை நாட்டிலே செய்து கொடுக்குமாறு வலியுறுத்தி கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வைத்தியர்களும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். வைத்தியசாலையிலிருந்து பதாகைகளை ஏந்தியவாறு பேரணியாக வீதிக்கு வந்து கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் பல்வேறு மாவட்டங்களிலும் அமைந்துள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் போராட்டங்களை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

(நி-4-299-316)


# சேவை நலன் பாராட்டும்
## மணிவிழா வாழ்த்தும்

திரு.
**கணபதிப்பிள்ளை ஜெகதீஸ்வரன்**
(உப அதிபர்)
SLTS-1 (BA,Dip in Ed,MA(Tamil)

**சேவை விபரம்**
க/கதிரேசன் மத்திய கல்லூரி,
நாவலப்பிட்டி
1987.12.14 - 2011.05.01
யா/சங்கானை சிவப்பிரகாச
மகா வித்தியாலயம்
2011.05.02 - 2023.09.12




முப்பத்தாறு வருடங்கள்
ஆசிரியராக,
பகுதிதலைவராக,
உப அதிபராக
சேவையாற்றி ,
இன்று ஓய்வு பெறும்
திரு.கணபதிப்பிள்ளை
ஜெகதீஸ்வரன்
அவர்களின்
ஒய்வு காலம் சிறப்புற
அமைய வாழ்த்துகின்றோம்.

(சி-7244)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.





## தேர் ஏறி வாரும் ஐயா

தேர் ஏறி பவனி வரும்
நல்லூர்க் கந்தனே எங்கள்
துன்பங்கள் அனைத்தையும்
போக்கிடவே தேர் ஏறி வாரும் ஐயா
வள்ளி தெய்வானையுடன்
தேர் ஏறி வரும் காட்சியினைக்
காண எட்டுத் திக்கிலிருந்து
வரும் பக்த கோடிகளின்
துயர்தனைப் போக்கி அமைதி காத்திடவே
நல்லூர்க் குமரனே தேரேறி வாரும் ஐயா

க.திருமகள்,
பண்டத்தரிப்பு.

## நல்லை முருகன் பவனி காண்போம்

தங்கரதப் பவனி வந்து தரணியினைக் காத்திட்வே
எங்கள் நல்லை முருகன் தேரில் வந்தான்- அடியார்
படும் துயரைப் போக்கிடவே வந்தான்
சங்கங்கள் முழங்கி வர ஆறுமுகத் திருமுருகன் தெய்வானை
வள்ளியர் இருவருடன் நீல மயில் மீதமந்து
அடியவர் மனம் குளிர நல்லருளைத் தந்தான்

ஆலயத்து மணியோசை ஓம்ஓம் என்றொலிக்க
அருளிசையைப் பாடும் பக்தர் ஆர்ப்பரித்து ஆடிப்பாட
திருவருளை வேண்டி கண்ணீர் சொரிந்தனர்
நாலுவகைப் பூக்கள் கொண்டு நறுமாலை அணிந்த வேலன்
நாற்புறமும் அடியார் சூழ வந்தான்-வந்து
அடியார் துயர் போக்கி அருள் தந்தான்


முருகன் நாமம் விண்ணைத் தொட வானவர்கள் மழை பொழிய
வேத ஒலி கேட்டு நின்ற பக்தர்கள் - கூடி
ஆடிப்பாடி காவடிகள் தூக்கி நின்றனர்
மருவுமடி யார்கள் பலர் வேண்டுதலை நிறைவேற்ற
அங்கப் பிரதட்சனங்கள் செய்து-நெஞ்சில்
நிறைந்த மனத்துடன் பிரசாதம் சூடி நின்றார்

சி.சிவானந்தராஜ்,
பண்டத்தரிப்பு.

## தேரடியின் மகிமை அறிவீரோ

தேரடியின் மகிமையை அறிவீரோ- முருகன்
தேடி வந்து அருள் புரிவான் அறிவீரோ
நேரடிச் சித்தர் வாழ்ந்த இடமல்லோ-தினமும்
தேடி வந்து நீரும் வணங்குவீரோ
சண்முகன் காட்சி தரும் இடமல்லோ- எங்கள்
சஞ்சலங்கள் போக்கிடுவான் அவனல்லோ- நம்பி
வணங்குவோரைக் காக்கும் இடமல்லோ- எம்மை
வாழ வைக்கும் நல்லூரின் இடமல்லோ!

நல்லைக்குகன்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நல்லைக்...

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோயில் இரதோற்சவம் இன்றாகும்.

காலை வசந்தமண்டப பூசை இடம் பெற்று முருகப் பெருமான் தேரில் ஆரோகணிப்பார். (ம-7)

## அத்தியாவசிய...

வகையில் இந்த வர்த்தமானி அறிவித் தலை ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க நேற்று வெளியிட்டார்.

தொடருந்து பணிப்புறக்கணிப்பு காரணமாக மக்கள் எதிர்கொள்ளக் கூடிய அசௌகரியங்களை தவிர்ப் பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித் துள்ளது. (ம-7)

## மின்சார வாகன...

வைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங் கப்பட்டுள்ளது.

அமைச்சரவை அனுமதி முதலீடு களை ஈர்ப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுங்கக் கட்டணமின்றி 30,000 அமெ ரிக்க டொலர்களுக்கு அதிக கட்டணத் திற்கு உட்படாத மின்சார வாகனங் களை இறக்குமதி செய்ய தீர்மானிக் கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள் ளது.

இந்த நிலையில், கடந்த மாதம் அத்தியாவசியத் தேவைகளுக்கான பொதுப்பயன்பாட்டு வாகனங்களின் இறக்குமதிக்கு அமைச்சரவை அங்கீ காரம் வழங்கியது.

எனினும், மோட்டார் வாகனங்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் இதுவரை நீக்கவில்லை என்பது குறிப்பிடத்தக் கது. (ம-7)

## தமிழ் அரசியல்...

தமிழ் அரசியல் கைதிகளினதும் விடு தலையை வேண்டி, குரலற்றவர்களின் குரல் அமைப்பினரால் நேற்றைய தினம் நல்லூர் ஆலய முன்றலில் 17 தேங்காய்களை உடைத்து விஷேட வழிபாட்டினை மேற்கொண்டனர்.

இந்நிகழ்வில் அரசியல் கைதி களின் உறவினர்கள், முன்னாள் அரசி யல் கைதிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பல தரப்பினரும் கலந்துகொண் டனர். (ம-7)

## அபிலாஷை...

பிரதிநிதிகளின் உரையும் இடம்பெற் றது.

அதன்படி இந்தியா சார்பில் பேரவையில் உரையாற்றிய மணி பாண்டேவினால் சுட்டிக்காட்டப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு,

இலங்கையின் அயல்நாடு மற்றும் நெருங்கிய நட்புநாடு என்ற ரீதியில் கடந்த 2009ஆம் ஆண்டு தொடக்கம் நிவாரணம், புனர்வாழ்வளித்தல், மீள் குடியேற்றம் மற்றும் மீளக்கட்டியெழுப் பல் ஆகியவற்றை முன்னிறுத்திய இலங்கையின் முயற்சிகளுக்கு இந் தியா தொடர்ச்சியான ஆதரவை வழங்கி வந்திருக்கின்றது. அதுமாத்திரமன்றி இலங்கை தற்போது முகங்கொடுத் திருக்கும் பொருளாதார நெருக்கடியை உரியவாறு கையாள்வதற்கு சுமார் 4 பில்லியன் டொலருக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய உதவிகளை இந்தியா வழங்கியிருக்கின்றது.

இந்தியா எப்போதும் இரண்டு அடிப் படைக்கொள்கைகளின் பிரகாரமே செயற்பட்டு வருகின்றது. நீதி, சமத்து வம், கௌரவம், சமாதானத்துக்கான தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு ஆதரவளித்தல் மற்றும் இலங்கையின் ஒருமைப்பாடு, இறையாண்மை ஆகியவையே அவையாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் நீதி, சமத்துவம் மற்றும் சமாதானத் துக் கான தமிழ்மக்களின் அபிலாஷை களை இலங்கை அரசாங்கம் பூர்த்தி செய்யும் என்றும், அரசியலமைப்புக் கான 13ஆவது திருத்தத்தை அமுல் படுத்தல் மற்றும் மாகாண சபைத் தேர் தல்களை நடத்துதல் ஆகிய கடப்பாடு களை நிறைவேற்றும் என்றும் எதிர் பார்க்கின்றோம்.

தமது கடப்பாடுகளை நிறைவேற்று வது குறித்து இலங்கை அரசாங்கம் வழங்கியிருக்கும் உத்தரவாதத்தைக் கவனத்திற்கொள்ளும் அதேவேளை, அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் போதுமானவையாக இல்லை.

ஆகவே அனைத்துப் பிரஜைகளி னதும் அடிப்படை உரிமைகளும் மனித உரிமைகளும் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையிலான தமது கடப்பாடுகளை உடனடியாக நிறை வேற்றுவதற்கு அர்த்தபூர்வமான நட வடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின்றோம் என்று அவர் குறிப் பிட்டார். (ம-7)

## இலங்கையின்...

ரிக்கத் தூதுவர் கெல்லி பில்லிங்ஸ்லி, மனித உரிமைகள் பேரவையின் இலங்கை மீதான கவனத்தை அமெ ரிக்கா பாராட்டுவதாக தெரிவித்தார்.

"அது அதன் பொருளாதார மீட் சியை வழிநடத்தும்போது, ஊழலுக்கு எதிரான சட்டம் உட்பட இலங்கையின் பலப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களை நாங்கள் அங்கீகரிக்கிறோம். பயங்கர வாதத் தடைச் சட்டத்தின் கீழ் விசா ரணையின்றி தடுத்து வைக்கப்பட் டுள்ள 100க்கும் மேற்பட்ட நபர்களை அரசாங்கம் பிணையில் விடுவித்ததை யும் நாங்கள் வரவேற்கிறோம்," என்று அவர் கூறினார்.

அமெரிக்கத் தூதுவர் காணி விடு விப்பில் ஆரம்ப முன்னேற்றத்தைப் பாராட்டினார்.

"சிறுபான்மை சமூகங்களில் உள்ள மதத் தலங்களில் ஏற்படும் பதற்றங் கள், சிவில் சமூகத்தின் மீதான அர சாங்க அழுத்தம் மற்றும் 2018 முதல் உள்ளாட்சித் தேர்தல்கள் இல்லாதது குறித்து நாங்கள் கவலைப்படுகிறோம். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை இறுதி செய்வதில் சர்வதேச சிறந்த நடைமுறைகள், அர்த்தமுள்ள ஆலோ சனைகளை நாங்கள் ஊக்குவிக்கி றோம்" என்று தூதர் கூறினார். (ம-7)

## 7 எச்...

கொக்குத் தொடுவாய் மனித புதைகுழியின் 6ஆம் நாள் நிறை வில் இதுவரை 7 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள் ளன.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணிகள் நேற்று ஆறாவது நாளாக இடம் பெற்ற நிலையில் குறித்த அகழ் வாய்வின்போது ஏழு மனித எச்சங் கள் அடையாளப் படுத்தப்பட்டி ருந்ததுடன் ஐந்து மனித எச்சங்கள் முழுமையாக அகழ்ந்தெடுக் கப்பட்டது.

அகழ்வு பணி யின் இறுதியில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரி வித்த முல்லைத் தீவு மாவட்ட சட்ட வைத்திய அதி காரி கனகசபா பதி வாசுதேவா நேற்றைய தினம் ஒரு உடற்பாகம் முழுமையாகவும் இன்னொரு உடற் பாகம் பகுதியள வில் மீட்கப்பட்ட தாகவும் ஏற் கெனவே மீட்கப் பட்ட ஐந்து உடற் பாகங்களுடன் ஆறு உடற் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில் அகழ்வு பணிகள் தொடர்ந்து இன்றைய தின மும் ஏழாவது நாளாக முன்னெடுக்கப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,299)

## 55 பவுண் நகை
# உரும்பிராயில் கொள்ளை

உரும்பிராயில் வெளிநாட்டிலிருந்து வந்த குடும்பத்தினர் தங்கியிருந்த வீட்டுக்குள் புகுந்து பெருமளவு நகை, பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை இந்த கொள் ளைச் சம்பவம் நடைபெற்றது.

பிரித்தானியாவிலிருந்து விடுமுறை யில் வந்துள்ள குடும்பத்தினர், நேற்று முன்தினம் நல்லூர் கோயிலுக்கு சென்று விட்டு, இரவு 9 மணியளவில் வீடு திரும்பியுள்ளனர். பின்னர் படுக்கைக்கு சென்றுவிட்டனர்.

வீட்டுக்குள் மர்மநபர்கள் புகுந்து 55 பவுண் தங்க நகைகளையும், 60 ஸ்ரே லிங் பவுண்ஸ் பணத்தையும் கொள்ளை யிட்டு சென்றுள்ளனர்.

இது தொடர்பில் கோப்பாய் பொலி ஸாரிடம் முறையிட்டதை தொடர்ந்து, விசாரணைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன. (ம-7)

மெகா பவர்
திகதி 12/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1583
T 01 04 11 41 68
10043

தன நிதானய
திகதி - 2023.09.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1265
E 03 04 16 48 E
24373

லக்கி 7
திகதி 12.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0061
L7 இலக்கம் 4 0
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 7 1 5 6 1 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3477
சீட்டிழுப்பு திகதி 12.09.2023
V 24 33 38 58 V
73881

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.09.12
சீட்டிழுப்பு இலக்கம் 544
மேஷம் 20 36 60 62 மேஷம்

மஹஜன சம்பத
திகதி 2023/09/12
சீட்டிழுப்பு இலக்கம் 5235
Z 1 5 4 6 1 7

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2209
வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.12
தினம் செவ்வாய்க்கிழமை
08 51 57 60 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,294,108.40
71292 457

சனிதா
திகதி 2023.09.12 வெற்றி வாரம் 4370 வர்ணம் பச்சை
04 16 47 67 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,204,136.00
31870 253

சசிரி
வெற்றி வாரம் 375
2023.09.12
09 31 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,322,800/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3921 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.09.12 தினம் செவ்வாய்க்கிழமை
03 12 14 34
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,200,564/-
68824 493

கப்ரக
12.09.2023 வெற்றி வாரம் 1385
A 25 13 37 60 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 438,995,414.20
16319 290
DLB தொலைபேசி 011-2 333 546-47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2035
சீட்டிழுப்பு திகதி : 2023.09.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,890,664/-
27 51 66 68 H
14765 326

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்பறத் திருவிழாவில் இலட்சக் கணக்கான பத்தர்கள் சன நெரிசலில் அகப்பட்டு 8 பேர் வைத்தியசாலையில்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற சப்பறத் திருவிழாவில் இலட்சக்கணக்கான பக்தர்கள் கூடியிருந்தனர். இதனால் நல்லூர் வீதியெங்கும் சன நெரிசல் ஏற்பட்டு இருந்ததுடன் வாகன நெருக்கடியும் காணப்பட்டது.

நல்லை ஆதீனப் பகுதியில் ஏற்பட்ட சன நெரிசலில் சிக்குண்டு 8 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நல்லூர் முருகன் கோவிலுக்கு வருகின்ற வீதிகளில் பொலிஸார் எவரும் சேவைகளில் ஈடுபட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

# தையிட்டியில் காணி அளவீடு நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தையிட்டியில் முன்னெடுக்கப்பட இருந்த காணி அளவீட்டுப்பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

காணி அளவீட்டு பணிகள் நேற்று காலை முன்னெடுக்கப்பட இருந்த நிலையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனை அடுத்து தெல்லிப்பளை பிரதேச செயலாளரின் அறிவித்தலுக்கு அமைய அளவீட்டுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. (ம-7.33)


யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

க.பொ.த (உ/த) 2022 பிரிவு மாணவர்களுக்கான அறிவித்தல்

க.பொ.த உயர்தரம் 2023 பரீட்சைக்கு இரண்டாம் தடவையாக பாடசாலைப் பரீட்சார்த்தியாக தோற்றவுள்ள மாணவர்கள் தமது விபரங்களை 14.09.2023 வியாழக்கிழமை பி.ப 1.00 மணிக்கு முன்னர் தத்தமது வகுப்பாசிரியரைத் தொடர்பு கொண்டு பதிவுசெய்யவும்.

திருமதி இ.முத்துக்குமாரன்
அதிபர்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
(C-7251)

INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Srilanka
Under the purview of the Ministry of Investment Promotion
MPCS Building, 127,K.K.S.Road, Jaffna, Srilanka
Office :- 021 222 3641
Fax No :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்

2023 September-Batch
- Dip.in Microsoft Office
- Dip.in Desktop publishing
- Dip.in Information Technology
- Dip.in Computer Programming
- Dip.in Wep Page Designing

06 Month Online Course
- Dip.in PC Application & Office Management

06 Month Languages
- VB.net
- PHP
- C/C++
- C#
- Java
- AutoCAD

20 hours Workshops
- Internet & e-mail
- Hardware

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :-27.09.2023
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :-30.09.2023

CENTRE FOR INFORMATION TECHNOLOGY
(C-7242)

Jobs in UK
Open to register the following positions.
Care Worker, Registered nurse, Dentist, Car Panel beater, Electrical Design Engineer, Healthcare Assistant and Marketing and Sales Executive.
Eligible Candidate please send your Resume to this email
Id: naltcjaffna@gmail.com
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்துதரப்படும்.
077 038 5584
Visa Consultant - 134, Adiyapatham Road, Thirunelvely Jaffna.
(17069)

CANADA VISA
1)Minor Education - (Age Limit - 7 to 17 years) தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2)Visitor Visa - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
3)Student Visa-IELTS 6.00 உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். (jan 2024)
4)Work and Study Program - Course fee after Visa மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
5) Caregiver Vacancy available - experience உள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.
Contact : VISA Consultant,
136, Adiyapatham Road, Thirunelvely, Jaffna. T.P : 077 038 5584
(17004)

மலிவு விற்பனை
கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்
உலகெங்குமுள்ள உறவுகளிமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை
WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram money transfer
ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7229)
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

வெளிநாடுகளுக்கான DHL பொதிகள் சேவை
மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 400/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
T.P : 0777 55 45 28
321, K.K.S. Road, Jaffna.
(17005)

VILLAGE HOTEL JAFFNA EXPRESS
பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
யாழ் - கொழும்பு 2,900/=
வடமராட்சி - கொழும்பு 2,700/=
T.P: 077 544 8503
(17019)

விசா விண்ணப்பம்
கனடா | பிரான்ஸ் | லண்டன்
ஆகிய நாடுகளுக்கு விசிட் விசா, பொன்சர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாக்கள் ஆகிய விசாக்கள் பெற்றுத் தரப்படும். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்
கனடாவில் வேலைவாய்ப்பு 21 விசாக்கள் மட்டும் கையிருப்பு உள்ளது
முடிவுத்திகதி (20.09.2023)
தொடர்பு : 9.00 am - 6.00 pm
குறிப்பு : அனைத்துத் தகவல்களும் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும் (நிபந்தனைக்குட்பட்டது)
விசா சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று 16 ஆம் திகதி/ 9/ 2023 சனிக்கிழமை 10.30 – 4.30 மணிவரை நடைபெறும்
நடைபெறும் இடம் : Loyalas Wedding hall No.10, ST.Patrick Road (சென் பற்றிக்ஸ் முன்பாக)
NSA GROUP OF COMPANY PVT LTD
(நிபந்தனைக்குட்பட்டது. குறிப்பிட்ட விசா மாத்திரம் கையிருப்பில் உள்ளது. முற்பதிவுகள் அவசியம்) முற்பதிவு இல்லாதவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் தொலைபேசியில் தகவல்கள் வழங்கப்படமாட்டாது.
(17061)
077 266 6429, 021 221 0599
077 877 4838

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777
(C-7252)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்: • கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு
வயது -30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-7252)

வேலையாள் தேவை
மல்லாகம் அளவெட்டி வீதியில் இயங்கிவரும் பலசரக்குக் கடை ஒன்றில் பணிபுரிவதற்காக பெண் ஊழியர் ஒருவர் தேவை.
076 689 4075 (viber)
077 464 5872
(C-7241)

காணி விற்பனைக்கு
கோப்பாய் ராஜ வீதியில் இருந்து 500m தூரத்திற்குள்ளாக கண்ணகை அம்மன் கோயிலிற்கு தெற்குப் பக்கமாக பிள்ளையார் கோவிலுக்கு செல்லும் பாதையில் வீதியோரமாக 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு
076 654 5987
(17066)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல [illegible] யாழ்ப்பாணம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org